757

உ

# ஹிந்து தர்மம்.

இஃது
லால்குடியிலிருக்கும் ரிடைர்ட் அஸிஸ்டெண்டு இஞ்சினீர்
ராவ்ஸாஹிப்
பிரம்மஸ்ரீ L. A. ரெங்கஸாமி ஐயர் அவர்களால்
எழுதப்பட்டு

கும்பகோணம்
ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1925.

இதன் விலை அணா 4.] [தபால் சார்ஜ் வேறு.

உ

# ஹிந்து தர்மம்.

இஃது
லாலுகுடியிலிருக்கும் ரிடைர்ட் அஸிஸ்டெண்டு இஞ்சினீர்
ராவ்ஸாஹிப்

பிரம்மஸ்ரீ L. A. ரெங்கஸாமி ஐயர் அவர்களால்

எழுதப்பட்டு

கும்பகோணம்
ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1925.

அணு 4.]  [தபால் சார்ஜ் வேறு.

Q2
N25
177325

# முகவுரை.

ஆஸ்திக சிரோமணிகளே!

இச்சென்னை ராஜதானியில் பிராமணர்களை விரோதித்து பிராமணரல்லாதாரின் கிளர்ச்சி சில வருஷங்களுக்குமுன் புதிதாய்க் கிளம்பின காலத்தில் திருநெல்வேலி பிரம்மஸ்ரீ மஹான் ஜி. ராமச்சந்திர ஐயர் அவர்கள் ஸ்ரீ விவேக ஸம்வர்த்தநி சபையில் ஷெ கிளர்ச்சிக்குப் பிராமணரல்லாதாரின் தப்பான அபிப்ராயமே காரணமென்று விளக்கிக்காட்டியும் பிராம்மண்யத்திலிருந்து நழுவாமல் பிராமணர்களைப் பிரோத்ஸாகப்படுத்தியும் ஒரு உபந்நியாஸம் செய்தது ஆங்கிலத்தில் வெளிவந்திருந்ததை நான் பெரும்பாலும் தமிழில் மொழிபெயர்த்து அத்துடன் திருச்சினப்பள்ளி தக்ஷிணபாரத தர்மமண்டலத்தின் ஸஹ காரியதரிசியாக நானிருக்கும்போது வெளி ஜில்லாக்களில் சென்று சில உபந்நியாஸங்கள் செய்துவந்ததின் விஷயங்களையும் சேர்த்து விஸ்தரித்து நீண்டதொரு வியாஸம் எழுதி நான் கும்பகோணம் ஆர்யதர்மம் உபபத்திராதிபர் அவர்களுக்கு அனுப்பியிருந்ததில் அவர் தயவு செய்து அதைச் சென்ற மாசிமீ முதல் 9 பிரகாணங்களாகத் தன்னுடைய பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். ஆகிலும் அது தமிழ்நாட்டிலுள்ள ஹிந்து மதஸ்தர்களெல்லாருக்கும் உபயோகமாகும்படி கருதியும் அதை வாசிக்கும் பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதார்களுக்கும் ஸ்வதர்மப் பிரவிருத்தியில் உத்ஸாகமுண்டாகுமென்று நம்பியும் நான் ஷெ வியாஸத்தை ஒரே தொடர்ச்சியாய்ச் சேர்த்து "ஹிந்து தர்மம்" என்று பெயரிட்ட இப்புஸ்தகத்தை அச்சிட்டு வெளியிட்டிருப்பதைப் பெரியோர்கள் அங்கீகரிக்கும்படி பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தெப்பக்குளம் திருச்சி,
1—9—25.

L. A. ரெங்கஸாமி ஐயர்.

# பொருளடக்கம்.


| பிரகரணம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | சீர்திருத்தக்காரர்களின் செய்கையும் பிராமணர்களுக்கேற்பட்ட வெளித்தோற்றக் குறிகளும். | 1 |
| 2. | பிராமணர்களுக்குச் சிகையின் முக்கியம். | 6 |
| 3. | ஷை புண்ட்ரத்தின் முக்கியம். | 12 |
| 4. | ஷை யக்ஞோபவீதத்தின் முக்கியம். | 18 |
| 5. | பிராம்மண்யத்தின் நழுவுதலும் அதைத் தடுக்கவேண்டிய முக்கியமும். | 23 |
| 6. | பிராமணன் அனுஷ்டிக்கவேண்டிய தினஸரிக் கடமைகள். | 29 |
| 7. | பிராம்மண்யத்தின் நிலைமையைக் குறித்து அதைர்யம் வேண்டாம். | 35 |
| 8. | வேதியர்கள் தமது தொழிலை மாற்றினகாரணங்கள். | 40 |
| 9. | பிராமணரல்லாதாருக்கும் பிராமணர்களுக்கும் கடைசியாய்ச் சொல்லும் முக்கிய வார்த்தைகள். | 47 |

177375



# “ஹிந்து மதஸ்தர்கள் கவனிக்க வேண்டிய தர்மம்.”

பிர்மஸ்ரீ ஜி. ராமச்சந்திரய்யரவர்களால் திருநெல்வேலி ஸ்ரீ விவேகஸம்வர்த்திநீ சபையில் ஆங்கிலத்தில் செய்யப்பட்டதும், பிர்மஸ்ரீ ராவ்ஸாஹேப். எல். ஏ. ரெங்கஸாமி அய்யரவர்களால் தமிழில் மொழிபெயர்த்து விஸ்தரிககப்பட்டதுமான ஹிந்துமதஸ்தர்கள் யாவரும் கவனிக்கவேண்டிய தர்மததைப்பற்றிய சிறந்த உபன்யாஸம்.

## 1-பிரகரணம்.

சீர்திருத்தக்காரர்களின் செய்கையும்,

பிராமணஜாதிக்கு ஏற்பட்ட வெளித்தோற்றக் குறிகளும்.

பிராமணர்களே !

நம்மில் அநேகர் பிறப்பினாலும் பேருக்குமாத்திரமுமே பிராமணர்களாயிருந்து வருகிறோம். நம்முடைய பிராமண்யமானது ஒரு மயிரிழையில் தொங்கிக்கொண்டிருக்கிறது. அப்படியிருப்பதானது நம்முடைய ஆத்ம உன்னதிக்கு உண்மையில் உதவுவதற்குப் பதிலாய் நம்மை அதிக துர்ப்பாக்கிய நிலைமையில் வைததுவருகிறது. நம்மைப்பார்த்து மற்றவர்கள் பயப்படுவதாயும், பொறாமைப்படுவதாயும், பகிரங்கமாய் வெறுத்துத் தூஷிப்பதாயும் உங்களில் அனேகர் சொல்லுகிறார்கள்.

ஆனால் பிராமணரல்லாதாரில் கிளர்ச்சிக்காரருடைய பிழைகளையும், குற்றங்களையும் கவனிக்கும்போது மாத்திரம் நாம் பிராமண ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று நமக்கு நினைவுவருகிறது. நமக்குள் மிதம்மீறின ஆசாரச் சீர்திருத்தக்காரர்கள் அனேகர்

இருக்கிறார்கள். அவர்கள் ஹிந்துஜனபரிபாலனமுறை விஷயத்தில் ஏதோ அஸாதாரணமும், கோணலுமான அபிப்பிராயங்களை மனதில் வைத்துக்கொண்டு ஜாதிவேற்றுமை ஏற்பாடுகள் இருப்பது இத் தேசத்திற்கே ஒரு தீமையென்று குற்றம் கூறுகிறார்கள். மேலும் அப்படிக் குற்றம்கூறுகிறதோடுகூடவே பிராமணசமூகத்தின் ஐக்கியத்தைப் பலப்படுத்திக் காப்பாற்றி விருத்தி செய்யப் பிரயத்தினங்கள் கையாளப்படுவது அவசியமென்பதாயும், அப்படி ஏதோ உண்மையாகப் பிரயத்தினம்செய்யத் தங்களுக்கு அக்கறையிருப்பதுபோலவும் சிபார்சு பேசுகிறார்கள். இப்படி அவர்களுடைய தாறுமாறான கொள்கைகளின் நியாயத்தைக் கண்டறிவது அசாத்தியமாயிருந்தாலும ஒரு சங்கதிமட்டும் வியக்தமாகிறது. என்னவெனில, உலகவாழ்க்கையில வயறுவளர்க்கும் உத்யோகப் போராட்டத்தில் பிராமணர்கள் ஜயத்தோடு முந்திக்கொள்ளுகிற நிமித்தம் பிராமணர்கள்மீது பிராமணரல்லாதார் பலவிதஅவதூறு மொழிகின்றதைப் பிராமணர்கள் காணும்போது மனதில் சுருக்கென்று ரோசப்படுகிறார்கள் என்பதுவேயாம். சீர்திருத்த ஆவல் கொண்ட பிராமணர்களில் என்னுடைய வெகுநாள் பழக்கமுள்ள சிநேகிதர் ஒருவர் பிராமணர்களுக்குள் ஒற்றுமையே சூன்யமென்பதாயும், ஆகையால் அப்படிப்பட்ட பிராமணசமூகத்திற்கு உபகாரமான சாதகங்களைக் கையாடுவது சாயாமலிருக்கிறதாயும், அதைக்கண்டு தான் மனவருத்தப்படுவதாயும் சொல்லிக்கொண்டது எனக்குத் தெரிந்தும்கூட அவருக்கு நான் பரிகாரம்ஒன்றும சொல்லாமல் அவருடைய நிலைமையைக் கண்டு அனுதாபமட்டும் பட்டேன். ஏனெனில், பிராமணசமூகத்தின் வாழ்க்கைக்கு ஜீவாதாரமான பிராமண்யத்தைப் பாதுகாப்பதையே லக்ஷியம்செய்யாத அந்த மனுஷ்யனுக்கு நான் பரிகாரம் என்ன சொல்லஇருக்கிறது. உண்மையான பிராமண்யத்தைச் சட்டைசெய்யாமல் பிராமணஜன சமூகத்தைப்பற்றிக் கவலைப்பட்டுப் பேசுவதெல்லாம் வீண் பிதற்றலேயாகும். பிராமணனாய்ப் பிறந்திருந்தபோதிலும் ஜாதி ஏற்

பாட்டை நிந்திக்கிறவனும், பிராமணவாழ்க்கைக்கு அத்யாவச்ய மான கடமைகளைக்கூடச் செய்யாமல் விட்டுவிட்டிருப்பவனும், அந்தப் பிராமணசமூகத்திற்கு இறந்துபோனவனைவிடக் கேடே எனனலாம். அவன் அந்தப் பிராமணசமூகத்தைச்சேர்ந்தவனுய்க் காட்டிக்கொள்வதும், தேன்மொழிகளைப் பேசுவதும் மோசக்கா ரப் பாசாங்கேயாகும். அப்படிப்பட்ட வேஷதாரிகளுடைய விஷ யத்தில் எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் பிராமணர்களுடைய சமூகத்திற்கு உண்மையில் விரோதியாயிருந்துங்கூட அந்த பிரா மணர்களுடைய சமூகத்திற்கு மத்தியில் வெளிக்குமட்டும் நட மாடினுலும் தங்களுடைய ஸ்வதர்மத்தை எப்போது கைவிட்டு விட்டார்களோ, அப்போதே அவர்கள் அன்யமான பதிதர்களாய் விட்டார்களென்றும், தேகத்தில் விஷமானது உட்புகுந்து வேலை செய்வதுபோல் அவர்கள் பிராமணசமூகத்தை ரகஸியமாயிருந்து கொண்டு அழிப்பவர்களென்றும் நீங்கள் எண்ணுங்கள். அவர்க ளுடைய பதிதத்தன்மையையும், அவர்கள் லௌகிகத்தில் என்ன உன்னதப் பதவியிலிருந்தாலும் பிராமணசமூகம நீடிகதுச் சாச் வதமாய் வாழ்வதற்கு அவர்கள் எள்ளளவும் உதவமாட்டார்க ளென்பதையும் நீங்கள் நிச்சயமாய் நமபுங்கள். அவர்கள் தேச நன்மைக்கு உழைப்பதாயும், சமூக அபிவிருத்திக்கு உழைடபதா யும் சொல்லிக்கொள்வார்களே ஒழிய, உட்புகுந்து பார்த்தால் அவர்கள் இந்தக் கலியுக அதர்மத்திற்குக் கருவிகளாய்நின்று கலி புருஷனுடைய சூததிரக்கயிறினுல் ஆடும் ஒன்றுமறியாப் பொம் மைகளென்பது வெளிப்படும்.

நமக்கு ஆபத்துவிஷயத்தில் இவர்களுக்கு அடுத்தபடி யா ரென்றுல் தங்களைப் பிராமணர்களென்று சொல்லிக்கொண்டு உயர் ந்த ஆரியமதத்தின் நம்பிக்கையிலிருநது உள்ளுர நழுவியிருப்ப தற்கு ஏற்கத் தங்களுடைய வெளிகதோற்றத்தையும் மாற்றிக் கொண்டு திரிகிறவர்களேயாகும். இவர்களின் சங்கியை நாளாவட் டத்தில் அதிகமாகிக்கொண்டே வருகிறது, வைதீக தர்மத்தின்

ஆரியமதத்தைத் தொடர்ச்சியாய்க் கைப்பற்றிவரும் சமூகத்தினர் களை வெகுகாலத்திற்கு முன் ஐரோப்பா முதலிய அன்னியதேசங் களுக்குக் குடிப்போய் பலவித காரணங்களால் ஷெ ஆரிய மதத் தைவிட்டு நழுவிபபோன மற்ற சமூகத்தினர்களிலிருந்து பார்த்த மாத்திரத்தில் பகுத்தறியும்படி சில வெளிப்படையான சின்னங்க ளும் அறிகுறிகளும் தெரிந்து ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என் பது ஈச்வரனுடைய அமைப்பேயாகும். ஹிந்துவல்லாத அன்யர் களுக்கும் ஆரிய ஹிந்துவிற்கும் உள்ள வித்தியாசத்தைச் சிகையி னும் புண்டரத்தினும் முதல் வர்ணத்தைச் சேர்ந்த ஹிந்து த்விஜர்களுக்கும் நாலாம் வர்ணத்தினருக்கும் உள்ள வித்தியாசத் தை எக்ஞோப வீதத்தினும் பார்த்தமாத்திரத்தில் தெரிந்து கொள்ளலாம். ஹிந்துசமூகத்தைச் சேர்ந்தவனென்றும், பலான சம்பிரதாயத்தைச் சேர்ந்தவனென்றும், பலான ஆரிய பக்திமார்க் கத்தைச் சேர்நதவ னென்றும் உலகத்தோருக்குப் பார்த்ததும் காண்பிவிக்கும் சிகை புண்டரம் முதலிய ஷெ அடையாள அறி குறிகளைத் தன் மதத்தை இழிவாக நினைத்து தற்கணிசத்தையும் கைவிட்டவனாயிருந்தா லொழிய ஒரு ஹிந்துவும் அனுசரியாம லிருக்கமாட்டான்.

கர்ம உபாஸனா மார்க்கங்களைப்பற்றிச் சொல்லும் மதசம்பந்த மான விதிகளடங்கின ஒரு சாஸ்திரத்திலாவது ஷெ சிகைபுண்டர யஜ்ஞோபவீதக் குறிகளைப்பற்றிச் சொல்லாமலிருக்கவில்லை, நீங் கள் மதசம்பந்தமான கிரியைகளைச் செய்யும்போது அவைகளை உதாசீனம்செய்யச் சரிப்படவில்லை. நீங்கள் தர்மக்கிரியைகளின் பலனில் நம்பிக்கைவைப்பதானது இன்னின்ன பலன்களுக்கு இன் னின்ன கிரியைகள் செய்யவேண்டுமென்று விதித்திருக்கும் சாஸ் திரத்தில் நீங்கள்வைத்திருக்கும் நம்பிக்கையினாலேயே அல்லவா? ஆகையினால் இன்னின்ன கிரியைகளை இன்னின்னவிதமாயும் இன் னின்ன வழியாயுமிருந்துகொண்டு செய்யவேண்டுமென்று விதித் திருக்கிற சாஸ்திரப்பிரகாரம் நீங்கள் நடவாவிடில் உத்தேசித்த பலன்களை நீங்கள் எப்படி அடையச் சாயும். கர்மா, உபாஸனை

இவைகளின் தர்மக்கிரியைகள் இரண்டுவிதமான பலன்களை உத்தேசித்தவையாகும். அவைகள் நம்முடைய காயத்தையும் மனப்பாங்கையும் ஒட்டின சுபாவங்களுக்குச் சரியான பயிற்சியைக் கொடுப்பதுமன்னியில், கர்மா, உபாஸனை இவைகளுக்குப் பாத்தியதையை வகித்த மறுலோக கர்த்தாக்களாகிய தேவர்களுக்கும் திருப்திப்படுத்துகின்றனவுமாகும். தேவர்களுக்குத் திருப்தியானது போகபாக்கிய சாதகமுமன்னியில் கர்த்தா, உபாஸகர் இவர்களின் நிலைமைக்குத் தக்கபடி சித்தசுத்தியையும் உண்டாக்குகின்றது.

தேவதைகள் இந்திரியங்களுக்கும் மனதிற்கும் அபிமானி தேவதைகளாயிருக்கிறபடியால் சித்தசுத்தி வருவதற்கும் அவர்களைத் திருப்திப்படுத்துவது அவசியமாயிருக்கிறது. நம்மைவிட எத்தனையோமடங்கு தேவர்கள் அறிவிலும் சக்தியிலும் பெரியவர்களானாலும், அவர்கள்கூடப் பூர்ணமாகாதவர்களும் பந்தத்துக்குள்ளானவர்களுமேயாகும். ஆகையால் எவ்விதத்தில் அவர்களுக்குத்திருப்திசெய்யும்படி தெரிந்து ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ, அவ்விதத்திலேயே அவர்களை திருப்திசெய்து தீரவேண்டும். இதுவே இப்படியிருக்க, தேவர்களுக்குத் தாழ்ந்தபடியிலுள்ள பிரேதப் பிதுர்தேவதைகளுக்குக் கட்டாயம் சரியானபடி திருப்தியுண்டாக்குவது அதிக முக்கியமாகும். அது எந்தவிதத்தால் செய்யப்படவேண்டுமென்பது தெளிவாய் நமக்கு சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. இதுவிஷயமான ஆகுதிகளும், தியானமும் சரியாய்ச் செய்யப்பட்டாலொழிய அவைகள் பயன் படமாட்டா. இதற்குத் திருஷ்டாந்தம்:— கோர்ட்டில் வக்கில் ஆஜராவதின் கருத்தானது தன்னுடைய கக்ஷிக்காரனுடைய கக்ஷியின் உண்மையையும் நியாயத்தையும் தகுந்தபடி ஜட்ஜியின் மனதில் பதியும்படி எடுத்து விளக்கிக்காட்டுவதற்கு மட்டுமேயாகும். அப்படியிருந்தாலும் வக்கில் எங்கெந்தவிதமாயிருந்து நடந்துகொள்ளவேண்டுமோ அந்தப்படி நடந்துகொண்டுதானே கேஸை எடுத்துக்காட்டி வாதிக்கவேண்டியிருக்கிறது. அதாவது அந்த

வக்கீலானவர் சரியாய் லாங்கோட்டு, தலைக்குட்டை, கௌன்தரித்துக் கோர்ட்டார்முன் நின்றுகொண்டு சமயத்திற்கும் காரியத்திற்கும் ஏற்றவசனங்களாய் கேஸை எடுத்துரைக்கவேண்டியிருக்கிறது.

தான் பேசவேண்டிய வாதத்திற்கு மேலகண்ட வேஷங்கள் சம்பந்தமில்லாவிட்டாலும், அந்த ஏற்பாடுகளும் இன்னும எத்தனையோ நூற்றுக்கணக்கான சில்லரைக் கோர்ட்டு பத்ததிகளும அனுசரிக்கப்படவேண்டித்தானே யிருக்கிறது. இந்த பூலோகத்திலேயே அப்படியிருக்க, நமக்கிப்போது பிரத்யக்ஷமில்லாத வேறு லோகங்களில் அதிகாரம் வகித்தவர்களுக்கு மரியாதை, வந்தன திருப்திகள் செய்யும் விஷயத்தில் கர்ம உபாஸனுக்கிரமங்களில் கண்டிப்பாய் விதிக்கப்பட்ட பத்ததிகள் அனுசரிக்கப்படவேண்டியது இன்னும் அதிக முக்கியமல்லவா.

இந்த நியாயததை ஒப்புக்கொண்டு சாஸ்திரங்களின்விதிகளை உள்நுழைந்து பார்த்தால் பிதுர்களுக்கோ அல்லது மற்ற தேவர்களுக்கோ அப்போதைக்கப்போதோ அல்லது பிரதிதினமோ செய்ய வேண்டியிருக்கிற கிரியை விஷயத்தில் கர்த்தாவும் உபாஸகரும் வெளித்தோற்றததில அனுசரிக்க வேண்டிய கட்டாய விதிகளில் மேல்கண்ட சிகாபுண்ட்ர யக்ஞோபவீதக் குறிகள் முக்கியமானவைகளாய் எடுத்துச் சொல்லப் பட்டிருக்கின்றன என்பது தெரியவரும்.

## 2-பிரகரணம்.

(1) சிகையானது சாதாரணமாய் எல்லா சமயத்திலும் கெட்டியாய் முடியப்பட்டிருக்க வேண்டுமென்றும், அபரக்கிரியைக் காலங்களில் அவிழ்த்துவிடப் பட்டிருக்கவேண்டுமென்றும், இன்னும் சில அசந்தர்ப்பங்களில் கொஞ்சம் முடிந்தும் கொஞ்சம் அவிழ்த்துவிடப்பட்டுமிருக்க வேண்டுமென்றும், சில காலத்தில் முழுமொட்டை அடிக்கப்பட வேண்டுமென்றும்விதிக்

கப்பட்டிருக்கிறது. சிகை விஷயத்தைப்போலவே நல்லது பொல்லாததான அநேக சந்தர்ப்பங்களில், தான் மதசம்பந்தமாய் செய்யும் கிரியைகள் சரியான பலன் தரும்பொருட்டுத் தேகத்தைப் பற்றின ஸம்ஸ்காரங்களை நடத்துவதற்கு முன்னாகவோ அல்லது நடத்தித்தீர்ந்த உடனேயோ கர்த்தா க்ஷவரம் செய்துகொள்ள வேண்டுமென்பதும் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றது. அன்னிய தேசத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடாகிய முகக்ஷவர வழக்கமானது மிகவும் இழிவும் கேவலமும் கெடுதலுமான சாஸ்திரவிரோதமாயிருக்கிறது. இந்த துர்வாடிக்கையின் கருத்தை உட்புகுந்து விசாரித்தால் ஹிந்துவாயிருக்கவேண்டுமென்னும் ஆசையைக் கைவிடாத ஒருவன் அப்படிச் செய்வதைக் கவுரவமாய் உணரவேமாட்டான். எப்படி வேண்டுமென்றாலும் இஷ்டப்படி ஒருவன் செய்யலாமென்று கர்த்தாவிற்குச் சாஸ்திரம் இடங்கொடுக்கவில்லை. சாஸ்திரத்தின் விதிகளைக் கட்டாயம் அனுசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறான். 'ஹிந்துவாயிருக்கத் தனக்குச் சம்மதமேயில்லை யென்று நிராகரித்து விட்டவனை ஷை விதிகள் கட்டுப்படுத்த மாட்டா' என்பது நிச்சயமே. அப்படி நிராகரிக்காமல் இன்னும் ஹிந்துமத விதிகளில் நம்பிக்கை ஒட்டிக்கொண்டிருப்பவனுக்குத் தலை மயிரைக் கத்தரித்துக்கொண்டு முகக்ஷவரம் செய்துகொள்வது தப்பு என்பதை அவன் விசாரித்துத் தெரிந்துகொண்டானேயானால் அவன் தனக்கே அது நியாயமற்றது என்பது மனத்தில் படாமல்போகாது. அப்படிப்பட்டவன் தனது பிறப்புரிமையாகிய சுருதி ஸ்மிருதிகளுக்குக் கட்டுப்பட்டு உண்மையான ஹிந்துவாயிருக்க வேண்டும் பக்ஷத்தில் உடனே அவன்செய்த பிசகிற்குப் பிராயச்சித்தம் செய்துகொண்டு சூடாகர்மம் புதிதாய்ச் செய்துகொள்ள வேண்டும். அதாவது உடனே குடுமி வைத்துக்கொள்ளவேண்டியது. குடுமிக்கலியாணம் ஆடம்பரத்துடன் செய்வதானது சிகை வைத்துக்கொள்வதின் முக்கியத்தைச் சிறு வயதிலேயே வற்புறுத்துவதற்காகவே. குடுமியைத் தொடர்ச்சியாய்க் காப்பாற்றிவருவதைப் பரிக்ஷிப்பதற்காகவேதான் விவாகம் முதலிய

சந்தர்ப்பத்தில் ஒரு கர்மத்தைத் தொடங்குமுன்பே மாப்பிளைக்குக் குடுமியில் புஷ்பத்தைச் சூட்டச்சொல்லிப் புரோகிதர் கட்டாயப் படுத்துகிறார். பிறகு தாய்தந்தையர்களுக்கு உத்தரகிரியைச் செய்யும் காலத்தில் "அபன:சோசிஷத்து" என்ற மந்திரத்துடன் பாதிக்குடுமியை முடிந்துகொண்டு, மறுபாதியை அவிழ்த்துவிட்டுக்கொண்டு பிரேதத்தை ஆசந்தியில் இடம்வலம் சுற்றச் சொல்லும் சந்தர்ப்பத்திலும் குடுமியைத் தொடர்ச்சியாய்க் காப்பாற்றி வருகிறதும் வராததும் பரிக்ஷிக்கப்படுகிறதென்னலாம். மாதாபிதாக்களின் கருமம் செய்தாகும் கர்லம் வரையிலாவது சிகையை வைத்துக்கொண்டிருக்கிறானா என்பது பரிக்ஷிக்கப்படுகிறது. இதற்குள் வயதாகித் தலையில் வழுக்கைவிழுந்தால் தலையைக் கத்தரித்துக் கொள்ளும் அழகில் வைத்திருக்கும் பிரமையும் தானாய் நீங்கிப்போகிறது. சிகைவைத்துக் கொண்டால் விகாரமாயிருக்கும் என்று ஒருவன் பயப்படநிமித்தமில்லை. ஏனென்றால் தனது குடுமியின் முழுலக்ஷணத்தை என்னதான் பெரிய கண்ணாடியின் எதிரில் பார்த்துக் கொண்டாலும் பின்னழகு முழுவதையும் தானே அவன் நேரில்பார்க்கச் சரிப்படாது. அவனுடைய நெருங்கிய பந்துக்கள் அவன் சிகையைப்பார்த்து வெட்கப்பட்டுக் கேலிசெய்வார்களோ என்ற பயமும் வேண்டாம். ஏனென்றால் அப்படிப்பட்ட சிகையை வெகுநாளாய் அவர்கள் பார்த்துப் பார்தது அவர்களுக்குப் பழகிப் பிடித்துப் போயிருக்கிறது. சோழியர்களும், தீக்ஷிதர்களும் வைத்துக் கொண்டிருக்கும் சிகையையும் முடிந்து கொள்ளும் தினிசையும் அவர்களுடைய பந்துக்கள் பார்த்து அழகாயிருப்பதாய்ச் சிலாகித்துக் கொள்ளுகிறார்கள் அல்லவா? ஆகையால் ஹிந்துவல்லாதபுது ஏற்பாட்டுத் தலையைக் கண்டால் பந்துக்கள் எவ்வளவு அருவருக்கிறார்களோ அவ்வளவு வழக்கமாயுள்ள குடுமித்தலையை நிந்திக்க மாட்டார்கள் என்பது நிச்சயந்தான். ஹிந்துக்குடும்பத்திலிருந்து தனக்குத் தெரிந்தோ தன்னையறியாமலோ நழுவிப்போயிருக்கும் சில புதிய சிநேகிதர்களும் ஹிந்துவல்லாதவர்களும் குடுமித் தலையை விரும்பார்களோ என்று பயப்படும் பக்ஷத்தில் அப்படிப் பட்ட நியாயம் தெரியாத நெறிதவறியவர்களின் மேல்எழுந்த

வாரியான சிநேகவிச்வாசம் ஒரு பைசாக்கூடப் பெறமாட்டாது. அப்பேர்ப்பட்டவர்களின் சினேகமிருந்தும் பிரயோஜனமாகாது. ஹிந்துவல்லாத அன்னியர்கள் ஹிந்துக்களின் சிகையைக் கண்டால் வெறுக்கிறார்களென்றிருந்தால் அப்படி அன்னியர்கள் வெறுப்பதானது ஹிந்துவிற்கு ஒருபெரிய அதிர்ஷ்டமென்று எண்ணவேண்டும். முகம்மதியர்கள் குடுமியில்லாது மொட்டையாயிருப்பதுவும் காதலிக் பாதிரிமார்கள் குடுமியிருக்க வேண்டிய நடுத்தலையில் குடுமிப்பூவில்லைமாதிரி வழுக்கை பண்ணிக்கொண்டிருப்பதுவும் ஹிந்துக்களுடைய அதிர்ஷ்டத்தினாலே என்று எண்ணவேண்டும். அப்படிப்பட்ட அன்னியமதத்தார் எப்போது குடுமித்தலையை வெறுக்கிறார்களோ அப்போதே அவர்கள் குடுமி வைத்துக் கொள்ளப் போகிறதில்லை என்பது நிச்சயமாகிறது. அப்படி அவர்கள் ஹிந்துவின் குடுமியை வெறுப்பதானது ஹிந்துவிற்கடையாளமாகிய அறிகுறிகள் நன்கு காப்பாற்றப்பட ஒரு பத்திரமான வழியாயிற்று. ஒரு ஹிந்துவை நேரில்பார்த்த மாத்திரத்திலேயே அவனுடைய முகக்குறிகளால் அவன் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவனென்று சுளுவாய்க் கண்டறியலாம். ஒரு ஹிந்துவினுடைய தேகம் எங்கேயோ அனாதப்பிரேதமாய்க் கிடந்தாலும் அதைஹிந்துவென்று குடுமியால் கண்டுபிடித்து அதையநுசரித்து அவனுக்குத் தகனக்கிரியை நடத்தப்பட ஹேதுவாகும். ஆரியஹிந்து வைதீகமதம் எவ்வளவு விசேஷ சிரேஷ்டமானதோ அதை யொட்டியே அந்த ஹிந்துவினுடையதேகத் தோற்றமும் தனிமையான சிரேஷ்டத்தை அமையப் பெற்றிருக்கிறது. கேவலம் பூலோக மனிதவாழ்வின் தாழ்ந்த பௌதிக வாதக் கொள்கையைத் துச்சமெனத்தாண்டி ஆரிய ஹிந்துப் பயிற்சியால் மட்டும் சித்திக்கக்கூடிய சச்சிதானந்த நிலையின் உயர்ந்த நோக்கத்திற்கு வழிதேடும் ஒரு தர்மமார்க்கத்தில் ஆவலையுடைய ஹிந்துவின் தேகத்திற்குத் தலைமேல் வைத்திருக்கும் சிகையானது ஒரு த்வஜம்போல் துலங்குவதாகச் சொல்லலாம்.

முன்காலத்தில் ஒரு ஹிந்துவினுடைய சாஸ்திரவிதியான சிகையை மொட்டையடிப்பதானது அவனுக்கு ஒருகடுமையான தண்டனையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிக் குடுமியை

யிழந்து உலகத்திலும் தர்மவழியிலும் நிந்தையை அனுபவிப் பதைப் பார்க்கிலும் அவனுடைய சிகையை எடுக்காமல் தடுப் பதில் ரணவீரனுகச் சண்டைச் செய்து மாள்வதே மேலென் றெண்ணுவான். பிராணனை வாங்குவதற்குப் பதிலாய் ஒருவ னுடைய சிகையை யெடுத்துவிடுவது வழங்கிற் றென்பதற்கு அச்வத்தாமருக்குச் செய்யப்பட்ட தண்டனையே சாக்ஷி யென்ன லாம். இன்னமும் துன்மார்க்கனுக்குங் குடுமியை அறுத்து விடு வது ஒரு சரியான தண்டனையென்றும் குடுமி அறுபட்டவன் இழிவாயும் நாளது வரையில் எண்ணப்படுகிறுன். தண்டனைப் பட்டு ஒருவன் ஜயிலிற்குப்போய் நுழைந்ததும் அவனது தலை மயிரைக் கத்தரித்து விடுகிறுர்கள். இஷ்டானுசாரம் கண்டபடி திரியும் பிராமணர்களுக்குள் தற்காலம் நடந்துவரும் தலைக்கத்த ரித்துக் கொள்ளும் வழக்கமானது அனேகமாய்த்தெரியாத்தனத் தினுலேயே ஒழியவேண்டு மென்று அடத்துக்குச் செய்யும் காரியமாய்த் தோற்றவில்லை. நியாயத்தையும் சாஸ்திரத்தையும் அவர்களுக்குச் சரியாய் எடுத்து போதிக்கும் பக்ஷத்தில் அப் பேர்க்கொத்த நடவடிக்கைகளை அவர்கள் செய்யவே மாட்டார் கள். இனி அப்படிச் செய்வோரையும் செய்து கெட்டுப்போகா மல் நாம் தடுக்க இயலும். இப்படி இயலுமென்ற நம்பிக்கையைக் கொண்டேதான் நான் உண்மையை ஒளியாமலும், கூசாமலும் நேருக்கு நேர் உங்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அப் படி நான் சொல்வதானது முகத்தை விகாரப்படுத்திக்கொண்டா யிருக்கும் என்னுடைய சிறிய பெரிய சிநேகிதர்களுடைய மன தில் சுருக்கென்று கோபம் வருமாயிருக்கலாமானுலும் உண்மை யைத் தெரிந்து கொண்ட பிறகு தான் செய்த பிசகைத் திருத் திக்கொண்டு நல்வழிக்குத் திரும்பும்படி அவர்களிற் சிலரையா வது நான் சொல்லியிருப்பது தூண்டிவிடலாம். தலையைக் கத் தரித்துக் கொள்வதற்குக் காரணம் அதினுலுண்டாயிருக்கும் சௌகரியமும் தேக சுகமுமே என்று சிலர் வாதிப்பதானது யுக்திக்கொவ்வாத சிறுபிள்ளைத்தனமேயாகும். அப்படிச் செய்து கொள்ளாமல் முன்னிருந்த பூர்வீகர்களைக் காட்டிலும் நவீன நடத்தையுள்ள பிராமணன் பலம் அதிக முள்ளவனுக இருக்கி

ருே? இப்படிச் சௌகரியத்தையும் தேகசௌக்கியத்தையும் தனது தலையைக் கத்தரித்துக்கொண்டதற்கு ஒரு சாக்காகச் சொல்லிக்கொள்ளும் பிராமணன், தான் புதிதாய்க் கண்டுபிடித்த உபாயத்தை தனது மனைவிக்கும் புத்திரிக்கும் சவுக்கியமுண்டாக வேண்டி அவர்களிடத்திலும் அந்தத் தலையைக் கத்தரித்து பரீக்ஷையைச் செய்யச் சம்மதிப்பானு? ஒருக்காலும் சம்மதிக்க மாட்டானென்பது நிச்சயமே.

2. சிகையின் முக்கியத்தைப்பற்றி சாஸ்திரங்களில் கண்ட விதிகள் இங்கு என்னால் எடுத்து விபரமாய்ச் சொல்லப்பட்டிராத போதிலும் சாதாரணவெளித்தோற்றத்தைப்பற்றினமட்டிலாவது என்னால் சொல்லப்பட்டது. அதற்கு மேல் ஜாஸ்தியாய் சிகையைப்பற்றிவிவரிப்பது அனுவசியம். மொத்தத்தில்உண்மையான ஒவ்வொரு ஹிந்துவிற்கும் சிகையானது முக்கியம். அதனுல் தான் **शिखिन्** என்ற பதத்திற்கே பிராமணன் என்ற அர்த்தம் வந்திருக்கிறது. வேறு மதத்திற்கு மாறினவனுக்கும் அல்லது ஹிந்து தர்மங்களை ஒழித்துக் கை விட்டவனுக்கும் சிகையை எடுத்து விடுவது மிகவும் உத்தமம். அப்படிச் சிகையை எடுத்து விடச் சொல்லி நாமே அவனுக்குத் தைரியப் படுத்தலாம். ஆகையால் பிராமணரென்று பேர் மாத்திரம் வைத்துக்கொண்டு தகப்பன் முதலான முன்னோர் தர்மத்தை அனுசரிக்காமல் அலக்ஷ்யம் செய்துவிட்டிருக்கும் போலிப் பிராமணர்கள் ஒருவர் கூடத் தப்பாமல் தாராளமாய்ச் சிகையை எடுத்து விடட்டும். அப்படிச் செய்தால் தான் மீதியிருக்கும் உண்மையான ஹிந்து ஜன சமூகர்களிலிருந்து அவர்களை அடையாளமாய்ச் சுளுவாய்க் கண்டு கொள்ளலாம். தலைக்கத்தரிப்புப் பிராமணுள் எங்கும் நாளுக்கு நாள் அதிகரிப்பதானது பல திக்குகளில் பிராமாண்யம் வரவரக் குறைந்து வருகிறதைச் சூசிப்பிக்கின்றது. இந்தப்படி அவர்கள் அதிகரித்தால் இன்னும் சில காலத்திற்கும் சிகை வைத்திருக்கும் பிராமணர்கள் துர்லபமாய் விடுவார்களோ என்ன தெரியவில்லை. சிற்சில பிராமணர்கள் மட்டும் தற்காலம் அலக்ஷியம் செய்யப்பட்டதும், உலகம் தோன்றினது முதலுள்ளதுமான

பிர்ம்மபரம்பரையின் வழக்கங்களை ஒட்டிப்பிடித்துக் கொண்டு இடஞ்சலதிகரித்துக் கொண்டிருக்கும் இல்வாழ்கையிலுருந்து கொண்டும் இந்த ஜன்மத்தில் அல்லது மறு ஜன்மத்திலாவது தப்பிக்கடைத்தேற வழி பிறக்காதாவென்று நம்பி அங்கு மிங்கும் சிதறி வஸித்துக்கொண்டிருப்பார்கள் என்று நாம் எதிர் பார்க்க வேண்டியிருக்கிறது.

## 3-வது பிரகரணம்.

### பிராமணர்களுக்கு புண்ட்ரம் முக்கியம்.

சிகையைப்பற்றி நாம் வெகு சாரம் சொல்லிவிட்டது போதும். அங்கிருந்து சற்றுக் கீழிறங்கி நெற்றியைப்பற்றினமட்டில் புண்ட்ரத்தைக்குறித்துச் சற்றுப் பேசுவோம். இந்த ஸமயத்தில் என்னுடைய வேறொரு பிராமணசிநேகிதருடையசெயல் எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது. அவர் என்னை எப்போது கண்டாலும் பிராம்மணுளின் நிலைமையைத் திருத்தி அபிவிர்த்தி செய்ய வேண்டுமென்பதில் மிகவும் அக்கரையாய்ச் சொல்லிவருவார். ஆனுல் அவரோ தமது நெற்றியில் புண்ட்ரம் தரிக்கிறதில்லை. அந்த வழக்கத்தை அவர் விட்டு அனேகவருஷங்களாயின. அவர் புண்ட்ரம் தரிப்பதெல்லாம் வெறும் வேஷமென்றும், கர்மா உபாஸனைக் கிரியைகளில் புண்ட்ரம்தரிக்கவேண்டுமென்பது கட்டாயமில்லையென்றும் வாதிப்பார். அப்படிப்பட்ட கிரியைகளைக்கூட அவர் நடுவில் விட்டிருந்து, மறுபடி நூதனமாய்க் கைக்கொண்டவரென்று தெரிகிறது. இந்தப் புத்தியையும், எண்ணத்தையும் அவர் எங்கிருந்து கைக்கொண்டாரோ ஸ்வாமிக்குத்தான் தெரியும். அவருக்கு குரு அவரே தானென்றும், அப்படிப்பட்ட கொள்கை அவருக்கு அவரிடத்திலேயிருந்தே உதயமாயிற்றென்றும் பார்த்தாலே தோன்றுகிறது. கர்மம், உபாஸனு இவைகளைச் செய்யச்சொல்லி எந்த சாஸ்திரங்கள் விதிக்கின்றனவோ, அந்த சாஸ்திரங்களே ஷை தர்மக் கிரியைகளைச் செய்ய அவச்யமாய் வேண்டிய அங்கம் புண்ட்ரம்தரிப்பதே யென்றும், அந்த அங்கமில்லாவிட்டால் கிரியை நிஷ்பிரயோஜனமாய்விடுமென்றும் விதித்திருக்கின்றனவென்பதை அவர் படித்துப் பார்த்துத் தெரிந்து

கொள்ளவில்லை போலும்! சில கர்மங்களுக்கு முக்கியமாய்ப் பிரேத பிதுர்க்கள் விஷயத்தைப்பற்றின மட்டில் புண்டரம் தரித்துக்கொள்ளக்கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கிறது. புண்டரம் தரிக்காதவனை அவனுடைய உறவினர்கள் கண்டால் மனதில் திகிலுண்டாகி என்ன விசேஷம்; நெற்றியில் ஒன்றையும் காணோமேயென்று உடனே கேட்கிறார்கள் அல்லவா? ஆகையால் புண்டரம் தரிப்பதானது வெறும் அர்த்தமில்லாத வேஷமென்பது பிசகு. மதவிஷயமான கிரியைகளுக்குத் தக்கபடி புண்டரம் தரிப்பதும் அல்லது புண்டரம் தரிக்காதிருப்பதும் அவசியமான நிபந்தனைகளாக விதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி அவசியத்தை நம்பாவிட்டாலும் புண்டரம் தரிப்பது மேலுக்கு வேஷத்திற்கு என்றுதான் நினைத்துக்கொண்டே யோஜிப்போம். வேஷமே குடிகொண்ட இந்த உலகத்தில் வேஷத்தை அனுசரியாமல் எப்படி நாம் காலந்தள்ளக்கூடும்? வேஷமும் சில சமயங்களில் உபயோகத்திற்கு வேண்டித்தானிருக்கிறது. மற்ற வேஷங்கள் உதவுவதுபோல் தன்னைப்பற்றினமட்டில் புண்டரமும், தன்னைத்தரிப்பவனுக்கும் மற்றவருக்கும் சில லாபத்தை விளைக்காமல் போகவில்லை. சிகையைப்பற்றிச் சுருக்கிச் சொன்னதுபோலவே புண்டரத்தினுடைய விஷயத்தைப்பற்றியும அதிகமாய் மதசம்பந்தமான கருத்தை உள்நுழைந்து வர்ணிக்காமல் வெளிப்பார்வைக்கு விசதமாகும் சாதாரண அம்சத்தைப்பற்றினமட்டில் நான் சுருக்கிச் சொல்லுகிறேன். உள்நுழைந்து பார்த்தால் புண்டரத்தில் திருபுண்டரம், ஊர்த்வபுண்டரம், உத்தூளனம் முதலிய பலவகைகளுண்டு. அவைகளை விவரிப்பது இங்கே அனவசியம்.

(2) நம்முடைய மதத்திற்கு விசேஷமாய் ஏற்பட்ட யோக்கியதை என்னவெனில் அது ஜனங்களுடைய பற்பல வேற்றுமையுள்ள பூர்வநிலை, குணம் இவைகளுக்குத் தகுந்தவாறு அவரவர்களின் ஆத்ம உன்னதியைக் கைதூக்கிவிடும்படியான பற்பல கர்மாங்கங்களைக் காட்டிக்கொடுத்திருப்பதுவும், அவரவர்களுடைய பக்தியின்சார்வில் அவரவர்களின் அபிவிருத்தியின் பக்வத்திற்கேற்ப உபாஸனைக்காகப் பற்பல தேவதாபக்தியைக் காட்டிக்கொடுத்திருப்பதுவுமேயாகும். தியானமானது கட்டுப்பட்ட

மனத்தின் மூலகமாய் ஆகவேண்டியது அவசியமாயிருப்பதால் அந்த மனத்திறகு எட்டக்கூடியபடி ஒரு நிர்ணயமான ரூபத்தை பக்திக்குப் பாத்திரமான குறியாய் வைத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. பக்தியின் முடிவான பலனானது பக்தனுடையவும் பரபிர்மத்தினுடையவும் ஏகிபாவத்தேர்ச்சியாகிய ஸாயுஜ்ய பதவியேயாகையால், அதற்கடுத்தபடியான ஸாரூப்ய முக்தியைச் சீக்கிரத்தில் சாதித்துக்கொள்ளத் தனது தியானத்திற்குப் பாத்திரமான தேவதைக்கு அறிகுறியான அடையாளத்தைத் தனது தேகத்தில் தரித்துக்கொள்வது அவசியமாகிறது. தன்னுடைய பூர்வ ஜன்மங்களிலுள்ள மனநிலைப் பக்குவமானது சிவபக்தியை அல்லது விஷ்ணு பக்தியை அந்தரங்கத்தில் விதைத்திருக்கிறபடியால் அதையொட்டியே ஒவ்வொரு மனிதனும் இந்தஜன்மத்தில் சிவபக்த குடும்பத்திலோ அல்லது விஷ்ணுபக்த குடும்பத்திலோ ஜனனத்தை அடைந்திருக்கிறான். ஆகையால் அவனவனுடைய குடும்ப பூர்வாசாரமானது திருபுண்டரத்தையோ அல்லது ஊர்த்வ புண்டரத்தையோ தரிக்கும்படி விதித்திருக்கிறது. அளவில்லா நீதி, கிருபை, அன்பு இவற்றோடுகூடின ஈச்வரன் ஒவ்வொரு அரிய ஹிந்துவிற்கும் தனது பிதுர்குலத்தையும், அக்குடும்பத்தில் வழங்கும் புண்டரத்தையும் ஏற்படுத்தியிருப்பதைக் கொண்டே அவனுடைய அபிவிருத்தியைச் சாதித்துக்கொள்ள அவன் எந்த வழியான பக்தியைக் கைப்பிடிக்கவேண்டுமென்று தெளிவாய்க் காட்டிக்கொடுத்திருக்கிறார். தனக்கு இஷ்டமான புண்டரத்தை தரிக்க அவனுக்கிடம் கொடுக்கவில்லை. தனது குடும்பத்துக்கேற்பட்ட புண்டரத்தைக் கைவிட்டு எப்போதும் பாழ்நெற்றியோடிருக்கவும் அவனுக்கனுமதியில்லை. அவன் செய்யும் ஒவ்வொரு கர்மத்திலும் உபாஸனையிலும் மற்றச் சாதாரண சந்தர்ப்பங்களிலும் தனக்கேற்பட்ட புண்டரத்தை அவன் கட்டாயம் தரித்திருக்கவேண்டும். அப்படிச் செய்வதால்தான் தனது தேவதையின் குறியைத் தனது தேகத்தில் அணிந்திருப்பதுடன் தனக்கேற்பட்ட கர்மமார்க்க பக்திக்கேற்றபடி விதிக்கப்பட்டிருக்கும் கிரியைகளைத் தான் செய்துவரவேண்டுமென்று தனக்கு அடிக்கடி ஞாபகம் வந்துகொண்டிருக்கும். இதுவுமல்லாமல் அவனை மற்ற

வர்கள் பார்த்தமாத்திரத்திலேயே அவன் இன்னவிதமான மனப் பக்குவமுடையவனென்று சுளுவில் தெரிந்துகொள்ளப்படுவான். அப்படித் தெரிவதினால் அனுவசியமாயும், புத்திபூர்வமில்லாமலும் ஒருவருக்கொருவர் நேரிடக்கூடிய மனஸ்தாபமும் விலக்கப் படலாகும்.

(3) நம்முடைய பெரிய மதத்திற்கேற்பட்ட இன்னொரு சிரேஷ்டமான பெருமை யென்னவென்றால், அது மனித ஜன்மத்திற்குரிய புத்திக்கூர்மையினுடையவும், ஆத்மஞான அபிவிருத்தியினுடையவுமான பற்பல தாரணைகளுக்கேற்ற பிரகாரம் பற்பல வேற்றுமையுள்ள உபாஸனைகளை விதித்திருப்பதுமல்லாமல், எல்லாக் கொள்கைகளும் ஏகபரமாத்ம பாவனையையே சேருகின்றன என்ற முடிவான ஞானமானது குழப்பமும் தகாரும் உண்டாகாதபடி சுருதியில் படித்துப்படித்து வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அனுபோகஞானம் நிறைந்த மஹா ரிஷியாகிய ஸ்ரீ வேதவியாஸர் அநேக உபநிஷத்துக்களில் கண்ட பிரகாரம் சுருதியின் வழிகளைப் பின்றொடர்ந்தே எல்லா ஆரிய பக்தர்களையும் ஆத்ம உன்னதிபெற்று உய்விக்குமாறு அநேக புராணங்களை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். அந்தப் புராணங்களுள் சிலவற்றில் சிவனுக்குப் பிராதான்யமும், மற்றப் புராணங்களில் விஷ்ணுவிற்குப் பிராதான்யமும் கொடுத்திருந்தாலும் ஒரு கொள்கையுள்ள பக்தனுக்கும் மற்றொரு கொள்கையுள்ள பக்தனுக்கும் மனஸ்தாபமும் அவமரியாதையும் உண்டாகாவண்ணம் காப்பாற்ற எவ்வளவு பலம் கட்டவேண்டுமோ அவ்வளவு ஆதரவுகளையும் மேற்கண்ட இரண்டுவித புராணங்களிலும் எடுத்துக்காட்டியிருக்கிறார். இந்த மர்மம் சைவபுராணத்தில் விஷ்ணுவை சிவபக்தர்களுக்குள் முதன்மையாயும், விஷ்ணுபுராணத்தில் சிவனை விஷ்ணுபக்தர்களுக்குள் முதன்மையாயும் சொல்லப்பட்டிருக்கிறதினால் தெரியும். ஷை இரண்டுவகைப் புராணங்களையும் நிஷ்பக்ஷபாதமாய்ப் படித்தால் சிவபக்தர் விஷ்ணுபக்தர்களுக்குள் ஒருவிதசச்சரவும், விவாதமும் ஏற்பட இடமிராது. எல்லாப் புராணங்களும் பரபிர்மம். ரூபமில்லாத நிற்குணம் என்ற பெரிய உண்மையை வியக்தமாய் ஒப்

புக்கொள்ளுகின்றன. நிற்குணம் என்ற பதத்தின் சாதாரணமான தும், ஊகத்திற்கெட்டினதுமான அர்த்தம் எப்படியிருந்தாலும் சரி. உண்மையில் ரூபமில்லாத பரவஸ்துவிற்கு ரூபமுள்ளதெற்றி யிருப்பதாய்ப் பாவனை செய்வதினுலொழிய அந்த மூர்த்தி திரு புண்டரம் தரித்தவரா அல்லது ஊர்த்வபுண்டரம் தரித்தவரா என்ற விவாதம் கிளம்பமாட்டாது. நீங்கள் சிவபக்தனுயிருந்தா லும் சரி, விஷ்ணுபக்தனுயிருந்தாலும்சரி உங்களுடைய உபாஸ்ய தேவதையினுலேயே மற்றொருதேவதையானது உங்களைச்சேர்ந்த பக்தகோடிக்குள்ளே மிக சிரேஷ்டனுன பக்தனென்ருவது ஒப் புக்கொள்ளப்படாமல் தீராது. எப்படி என்ருல் தனது தேகமெங் கும் ஊர்த்வபுண்டரம் தரித்த ஒரு விஷ்ணுபக்தன் திருபுண்டரம் அல்லது பஸ்மோத்தூளனம் தரித்த ஒருசிவபக்தனை எதிரில்கண் டால் அவனுடைய கடமையானது "எதிரிலிருப்பவர் விஷ்ணுபக் தர்களில் முக்கியமான சிவனுடைய மார்க்கஸ்தர்" என்றெண்ணி அவனுக்கு மரியாதை செய்யவேண்டிய தென்பதுவேயாகும். இப்படிக்குச் சந்திப்பவர்கள் புண்டரம் தரித்திருந்தால்தான் பலான தேவதாபக்தனென்று ஒருவருக்கொருவர் அறிந்துகொள் ளச் சாத்தியமாகும். ஒரு வைஷ்ணவன் சைவனைக்கண்டால் சிவ னைப் பற்றியாவது சிவபக்தனைப்பற்றியாவது ஒருவித இழிவும் சொல்லக்கூடாது. தான் வேண்டுமானுல் வைஷ்ணவகோஷ்டியி லிருக்கும்போது மற்ற மூர்த்தியைவிடத் தன்னிஷ்டதேவதை யைச் சிலாகித்துக்கொள்ளட்டும். அப்படிச் செய்வது சிவபக்த னைப் பழிப்பதற்காகவல்ல. தன்னைச் சேர்ந்தவர்களுக்கு விஷ்ணு பக்தியை அசையாமல் அதிக உறுதிசெய்யவேண்டியதற்காகவே யாம். இப்பேர்ப்பட்ட உத்தமகுணமும் பெருமையும் எல்லா மூர்த்திகளும் ஒன்றேயென்ற அபேதபாவனையும் ஒருவருக்கொரு வர் மரியாதையும் அன்பும் அவரவர்கள் தரித்துக்கொள்ளும் புண் டரமாகிய அடையாளத்தினுலேயேயல்லவா ஜனிக்கின்றன?

(4) ஆகையினுல் புண்டரம் தரிப்பதானது மேன்பார்வை யாய் யோஜிக்கும்போதுகூட வெறும் வேஷமென்று சொல்லப் படுவது பிசகாகும். அஃது எந்த வெவ்வேறு சம்பிரதாயத்தைச்

சேர்ந்த பக்தர்களானாலும் சரி அவர்களுள் அன்யோன்ய அன்பிற்கும் நல்லெண்ணத்திற்கும் பொதுவான மரியாதைக்கும் அரிகுறியாய் விளங்குகிறது. ஆகையால் அதின் முக்கியமானகருத்து எல்லோர்களுக்குள்ளும் சமாதானத்தை நிலைநாட்டவேயொழிய இக்காலத்தில் சிலகவிகள் தெரியாமல் தப்பபிப்பிராயம்கொள்ளுகிற பிரகாரம் ஒன்றுமில்லாத விஷயத்திற்கு முட்டாள்தனச் சச்சாவு செய்துகொள்ள ஆஸ்பதமானதல்ல. இன்னும் என்னென்ன முக்கியமான தர்மநோக்கங்கள் புண்டரத்தினால் சாதிக்கப்படுகின்றன என்பதையும், புண்டரம் தரிக்கும்போது அதற்கேற்பட்ட வைதீகமந்திர உச்சாரணையோடு தரிக்கும்பக்ஷத்தில் அதினால் என்னென்ன பெரியமனச் சக்திகளும் பலன்களுமுண்டாகின்றனவென்பதையும், எவ்வளவு தத்வஞான அரிகுறிகள் அதிலடங்கியிருக்கின்றன என்பதையும் நாம் மாத்திரம் சாஸ்திரங்களால் வெளியாகிய பிரகாரம் சரியாய்க்கண்டறியும்பக்ஷத்தில், பிராம்மண சரீரங்கள் எடுத்திருந்தும் நவீன ஆசார சீர்திருத்தப்பயித்தியம்பிடித்து உளருகிறவர்கள் எவ்வளவு தாழ்ந்தஸ்திதிக்குநழுவி விட்டார்களென்ற சங்கதி நமக்கு வியக்தமாய்த் தெரியவரும். புண்டரம்தரிக்கும் விஷயத்தைப்பற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கடைசியாய்ச்சொல்லும் வார்த்தை யென்னவெனில் நீங்கள் உங்களுடைய குடும்பத்திய நீடித்த அனுஷ்டான புண்டரத்தைக் கைவிடாதேயுங்கள். உங்களுடைய இஷ்டப்பிரகாரம் தோன்றினபடி அதைமாற்றவும் உங்களுக்குச் சுவாதீனமில்லை. உங்களுடைய சொந்தப் புண்டரமே உங்களுக்கு முதல்தரமென்று எண்ணுங்கள். உங்களுடைய சொந்த புண்டரத்தினுடைய அரிகுறியின் முக்கியத்தை நீங்கள் இப்போது அறியக்கூடாவிட்டாலும் உங்களுடைய பெரியவர்களிடம் சரியாய் விசாரிக்கச் சிரமமெடுத்துக்கொள்ளும் பக்ஷத்தில் நீங்கள் அதன் முக்கியத்தை நிச்சயமாய்த் தெரிந்துகொள்வீர்கள். ஆனால் உங்களில் யாராவது உண்மையான ஹிந்துவாகயிருந்துவர இஷ்டமில்லாதவராயிருந்தால் அப்பேர்ப்பட்டவர்கள் புண்ட்ரதாரணையை அடியோடே விட்டு

விடுவதில் ஆக்ஷேபணையேயில்லை. இன்னும் பார்க்கப்போனால் அப்படிப்பட்டவர்கள் தாமதம் செய்யாமல் புண்டரததை உடனே விட்டுவிடுவது உத்தமம். ஏனென்றால் அவர்கள் அப்படி விடாமல் மேலுக்குமாத்திரம் புண்டாம் தரித்துவருவதினால் அவர்களுடைய உண்மையான மனச்சுபாவத்தைப் பார்ப்பவர்கள் தெரிந்துகொள்ளாமல் மோசம்போவார்கள்.

---

## 4—பிரகரணம்.

### பிராமணர்களுக்கு யக்ஞோபவீதம் முக்கியம்.

யக்ஞோபவீதமானது நம்முடைய மிஞ்சினபுராதனச் சீர்திருத்தக்காரர்களுக்குக் கொஞ்சம்கூடக் கோபத்தைக் கொடுக்கவில்லை. பார்த்தாலேயே அஃது அவர்களுடைய மார்பினுடைய ஆதரவை அனுபவிப்பதாகக் காணப்படுகிறது. ஜாதியேற்பாட்டின் ஆதாரத்தைப்பற்றியாவது அல்லது ஜாதியிருப்பது நியாயமென்றுவது சொல்லபட்ட ஒருவார்த்தை காதில்பட்டமாத்திரத்தில் பற்களை நெருநெரெனக் கடிக்கும் பிரம்மபந்துக்கள்கூடத் தங்கள் தேகத்தில் பூநூலை அணிந்து கொண்டேயிருக்கிறார்கள் என்பது ஆச்சரியமாயிருக்கிறது. நம்முடைய பாரதவருஷத்தின் தர்ம பூமியில் இந்தக்காலத்தில் எங்குபார்த்தாலும் பிராமண தேகத்தினர்களில் சிலர் கத்தரித்த தலைகளோடும், சிலர் புண்ட்ரம் தரிப்பதை வெகுநாளாய் விட்டுவிட்ட பாழ்நெற்றிகளோடும் ஒவ்வொருநாளிலும் ஒவ்வொரு மணியிலும் காணப்படுகிறார்களென்பது நம்முடைய துரதிர்ஷ்டமே. ஆனாலும் ஜாதி ஏற்பாட்டை நிந்திப்பதும் எல்லாரையும் சமத்வம் செய்ய உபதேசிப்பதுமாக இருந்துவரும் பிராமணச் சீர்திருத்தக்காரர்களில் ஒருவன்கூடத் தான்வாயாற் சொல்வதின் உண்மையை அனுஷ்டானத்தில் ருஜூச்செய்யும் பொருட்டுத் தனது தேகத்தில் அணிந்திருக்கும் யக்ஞோபவீதத்தைக் கழற்றி எறிந்துவிட்டு நடமாடுவதை நாம் இதுவரையில் பார்க்கவில்லை. அப்படி அவன் செய்

தாலல்லவோ தான் ஜாதியேற்பாட்டை நிந்திப்பது தன்மனசாக்ஷி யின் ஆதரவைப் பின்பற்றியதென்றும் பிராமணஸ்தானத்திலுள்ள தான் இன்னின்ன விசேஷதர்மங்களைச் செய்யக்கட்டுப்பட்டிருப் பதான கொள்கைமுழுவதும் அறிவீனமென்றும்தான் யக்ஞோப வீதம் தரிக்கக் கடமைப்படவில்லையென்று மனப் பூர்வமாய் தன க்கு நம்பிக்கையிருக்கிறதென்றும் அவன் தன்னைச் சேர்ந்த சீர் திருத்தக்காரர்களுக்கும் சினேகிதர்களுக்கும் உலகத்தோருக்கும் பிரத்யக்ஷத்தில் நடந்து காட்டுகிறவனுவான். ஜாதியேறபாட்டை அழிக்கப் பிரதிக்ஷித்துக்கொண்டு அடிக்கடி பெரிய நீதிசபை உத் தியோகத்திலுள்ள பிராமணர்கள் கோஷிக்கிறுர்களே யொழிய அப்படிப் பட்டமுழுச் சீர்திருத்தக்காரர்களில் ஒருவர்கூட மேற் கண்டபடி பூநூல் விஷயத்தில் அதைக்கழற்றி எரிந்துவிட்டு நட மாட முன் வரவில்லையென்பது எனுேதெரியவில்லை. புண்ட்ரம் தரியாத நெற்றியோடும் கத்தரித்ததலேயோடும் இருக்கும் நம் சினேகிதர்களாவது எல்லாவற்றிலும் ஒரேசீராயிருப்பதாய்க் காட் டும் பொருட்டாகிலும் தாங்கள் அப்படி யக்ஞோபவீதவிஷயத் திலும் நடந்து காட்டக்கூடாதா? சிகை புண்ட்ரவிஷயங்களைப் போல் யக்ஞோபவீதத்தைக் கைவிடச் சரிப்படாதென்றும், யக் ஞோபவீதத்தைத தரிக்கத்தாங்கள் கடமைப் பட்டிருப்பதாயும் அவர்கள் பதில் சொல்லும்பக்ஷத்தில் அப்படிக்கடமைப் பட்டி ருப்பதான உணர்ச்சி அவர்களுக்குண்டாகக் காரணமென்ன வென்று நான் அவர்களை ஒருகேள்வி கேட்கிறேன். அவர்கள் அந்தக்கேள்விக்குச் சரியான உத்தரம் சொல்லச்சரிப்படாமல் தாங்கள் பிராமணர்களின் கும்பலிலிருந்துவர ஆசைமட்டும் கொ ள்ளும்பக்ஷத்தில் அவர்களுக்கு யக்ஞோபவீதத்தின் அவச்யத் தைச் சொன்ன சாஸ்திரமே மற்ற இரண்டாகிய சிகை, புண்ட்ரம் இவைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறதென்பதை நாம் தீர்மான மாய் அவர்களுக்கு எடுத்துக்காட்டலாகும். அவர்கள் தாங்கள் பிராமணர்கள்போல் மேலுக்குக் காட்டிக்கொண்டாலே தங்க ளுக்குப் போதுமென்றும், பிராம்மண்ய மென்பதைத் தாங்கள் பொருட்படுத்தவில்லை யென்றும் சொல்லும் பக்ஷத்தில் அவர்க ளுக்கு மனுஷ்யதண்டனை யில்லாவிடினும், அவர்கள் நாணயங்

கெட்ட மோசக்காரர்களென்று ஸர்வசக்தியுள்ள ஈசுவரனால் சூடு போடப்பட்டு நாஸ்திகதுர்க்கதியை அனுபவிக்க வேண்டியது தான். இந்தவிஷயத்தில் மோசக்காரத்தனத்தைவகிக்கத்துணிந்து போன அவர்கள் அதேவழியாய் மனம் பழகிப்பழகி ராஜ்யத்தின் பிரஜையாகவும், உத்தியோகஸ்தராயும், தேசத்தின் நகரவாஸியாகவும் இருந்து வருவதற்குரிய மற்ற நடவடிக்கை விவகாரங்களிலும் அதுபோலவே மோசக்காரர்களாய் மாறிப்போகமாட்டார்களென்பது என்ன நிச்சயம்.

(2) ஆகிலும் அவர்கள்பேரில் கடுமையாயிருக்க நமக்கு நியாயமிருந்தாலும் அப்படி அவர்கள்பேரில் நாம் கடுமையைக் காட்ட வேண்டாம், ஒருகால் பிராம்மண்யத்தின் யோக்கிதையைச் சரியானபடி மதிக்க அவர்களுககுத் திறமையில்லாமற்போனது பூராவும் அவர்களுடைய பிழையாயில்லாதிருக்கலாம். அவர்கள் தர்மவிஷயத்தில் கெட்டுப்போனதற்குக் காரணங்கள் ஒருகால் தாய்தந்தையர்களாகவும், அல்லது அவர்களைச் சூழ்ந்திருக்கும் சம்பவங்களாகவும், நிச்சயமாய் அவர்களுடைய சந்தர்ப்பங்களாகவும் இருக்கலாம். அவர்களுடைய நிலைமையைப்பற்றி நாம் மனமிரங்கிப் பெரிய பிர்மரிஷி பரம்பரையைச் சேர்ந்த தர்ம ஆத்மபுத்தி இன்னும் அவர்களிடத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் பக்ஷத்தில் அவர்களில் ஒவ்வொருவனையும் அழிந்துபோகாமல் நாம் கைதூக்கி உதவிசெய்யவேண்டும். அவனுடைய சுபாவகுணத்தை உட்புகுந்து பார்த்தோமானால் அவனிடத்தில் அந்தர்கதமாய் மறைந்திருக்கும் பிராம்மண்யத்தினுடைய தேஜஸ்பொறியை நாம் கண்டுபிடிக்கக் கூடும். அதைக்கண்டு பிடித்து மெதுவாயும் ஸ்திரமாயுமுள்ள நற்போதனை மார்க்கங்களால் பழக்கினோமானால் அஃது உடனேயோ அல்லது கொஞ்சகாலத்திற்குள்ளேயோ மேலெழும்பி ஜோதியாய்ப் பிரகாசிக்கச் செய்யலாகும். அதினால் ஒருவேளை ஞானோதயமுண்டாகி அவன் கடைத்தேறுவது மல்லாமல் மற்றவர்களைக்கூட தத்வஞானமார்க்கத்திற்கு இழுத்துக்கொள்ளும் நிலைமை அவனுக்கு வந்தாலும் வரலாம். வரமுடியாதென்று யார்தான் சொல்லக்கூடும்? அவன் யக்ஞோபவீதத்தைக்கழற்றி எரியாமல் தரித்துக்கொண்டிருக்கிறானே, அதுவே

அவன் கடைத்தேறலாமென்று நாம் நம்புவதற்கு ஓர் ஆபஸ்தமாயிருக்கிறது. யக்ஞோபவீதமானது அவன் நேரில் சதாபார்த்துக் கொள்வதற்குச் சாத்தியமாயிருப்பதுபோல அவனுடைய தலைக்குடுமியும், நெற்றியும் அவனால் சதாநேரில் பாக்கமுடியாத இடத்திலிருக்கின்றனவே என்று நான் மனம் வருந்துகிறேன். அவன் யக்ஞோபவீதத்தைத் தனது மார்பில்பார்க்கும்போதெல்லாம் கொஞ்சம் எறினாலும் சரி தாழ்ந்தாலும் சரி, பிராமணதர்மத்தை அவன் செய்தாலும் சரி, விட்டு விட்டாலும் சரி, தன்னிடத்தில் த்விஜத்வமும் பிராம்மண்யமும் இருக்கிறதென்பதை அஃது அடிக்கடி அவனுக்கு ஞாபகமூட்டுகின்றது. அவன் பிராம்மண்யத்தைத் தெரிந்து கொண்டு கொஞ்சமாவது மதித்தாலும் சரி, மதிக்காவிட்டாலும் சரி,பிராம்மண்யம் போய்விடுமேயென்ற பயத்தினாலோ அல்லது பிராமண சமூகத்திலிருந்து தள்ளிவிடப்படுவோம் என்ற பயத்தினாலோ அவன் பூநூலைக்கழற்றியெறியாமல் தரித்துக்கொண்டிருப்பதாகத் தோன்றுகின்றது. இந்தப்பயமிருப்பதுவே அவனுடைய ஆத்மா காப்பாற்றப்படுவதற்கு நாளடைவில் சாதனமாய் முடியலாம். அவன் புத்திசாலியாயும் ஊகித்துக் கிரகிக்கும் வல்லவனாயுமிருப்பானானால் பிரம்மசூத்திரம் எனப்படும் யக்ஞோபவீதமென்பது என்னவென்றும், அதுமுச்சரடு சேர்ந்து பிரம்மமென்று பொருள்படும் பதம்சேர்ந்த பிரம்மக்ரந்தி என்ற முடிச்சுகள் அதிலிருப்பதற்குக் கருத்தென்னவென்றும், பிரம்மசாரிக்கு ஒற்றைப்பூநூலும் கிரஹஸ்தனுக்கு இரண்டு அல்லது அதிகமான பூநூல்களும் ஏன் ஏற்பட்டன என்றும், அதை எப்போதும் அல்லது தேவஉபாஸனை கர்மக்கிரியைகள் செய்யுங்காலத்தில் உபவீதமாய்ப் போட்டுக் கொள்ளுவானேனென்றும், ரிஷிகளுக்குத் தர்ப்பணப் பிரீதி செய்யுங்காலத்தில் அதைத் தாவிடமாய்ப் போட்டுக் கொள்ளுவானேனென்றும் பித்ருக்களுக்கும் பிரேததிருப்தி காலத்திலும் அதைப் பிராசினவீதமாய்ப் போட்டுக்கொள்ளுவானேனென்றும் அவனை விசாரித்துப் பார்க்கும்படி நாளாவர்த்தியில் நாம் செய்து விடலாம். முன்பு அடங்காதிருந்தவனும் இப்போது கேட்டு விசாரிக்க ஆரம்பித்திருப்பவனுமாகிய சிநேகிதனுடைய புதிதாய் உத

யமாயிருக்கும் அறிவானது யக்ஞோபவீதத்தை என் பிராமணனைக்கொண்டே அவன் தேகசுத்திமனச்சுத்தியோடும் அதற்கேற்பட்ட வைதிக மந்திரத்தை உச்சரித்துக் கொண்டேயும் நூற்கச் செய்யவேண்டு மென்பதையும், அந்தமந்திர உச்சாரணையானது யக்ஞோபவீதத்திற்கும் அதைத் தரிப்பவனுக்கும் எவ்வித தத்வ பலனைக்கொடுக்கிற தென்பதையும், யக்ஞோபவீதம் தயார்செய்யப்பட வேண்டியதிலும் தரித்துக்கொள்ளப்பட வேண்டிய விஷயத்திலும் ஏற்பட்டிருக்கும் இன்னும் அனேக சாஸ்திரவிதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் தாத்பரியம் என்ன வென்பதையும் உட்புகுந்து விசாரிக்கும்படி பெருக்கும். வாஸ்தவத்தில் அவன் மாத்திரம் பொறுமையோடும், முழுமனதோடும், யக்ஞோபவீதம் என்ற ஒருவிஷயத்தைப் பொறுத்தமட்டிலுமே வெளிவரும் உண்மையின் விளக்கத்தைக் கவனித்துக் கேட்டானானால் நம்முடைய ஆரிய தத்வக்ஞான சாஸ்திரத்தின் விஸ்தாரமான உட்பரப்பில் கிரியாம்சத்தில் அவன் ஆராய்ச்சி செய்பவனாய் விடுவான். இதே விதமாய் உண்மையான ஹிந்துவினுடைய சாதாரண அறிவிற்கெட்டிய இதர விஷயங்களில் வெளியாகும் மற்ற சாஸ்திர உண்மைகளையும் புகுந்து பார்க்கும்படி அவனைச் செய்துவிடும்பக்ஷத்தில் அவனுக்கு மேற்கண்டபடி தத்வக்ஞான ஆராய்ச்சி அதிகரிக்குமென்பதில் தடையில்லை. ஹிந்து சாமாஜிக் சாஸ்திரத்தைப் பற்றியும், ஹிந்துமதத்தைப்பற்றியும் ஒரு நிர்த்தாரணை செய்ய ஸ்வயபுத்தியுண்டாவதற்கு எவ்வளவோ கற்றுக்கொள்ளக் காத்திருக்கவேண்டிய நம்முடைய நாசகச் சீர்திருத்தக்காரர்களால் அர்த்தமில்லாத தென்பதாயும், மூடபக்தி யென்பதாயும் அனேக விஷயங்கள் அவமதிக்கப்படுவதற்கு இப்போது எங்கும் பரவியிருக்கும் அறியாமையும், தெய்வபக்தியின்மையுமே காரணமாயிருக்கின்றன. அந்தச் சீர்திருத்தக்காரர்களில் அனேகர் தலைநரைத்த வயோதிகர்களாயிருந்தும் அவர்கள் அறிவுவிஷயத்தில் குழந்தைகளே என்னலாம். அவர்களுடைய குழந்தைத் தனமான உச்சாரணங்களை உண்மையானவையா மதிக்கக்கூடாது.

---

## 5 பிரகரணம்.

## பிராம்மண்யத்தின் நழுவுதலும் அதைத்தடுக்க வேண்டிய முக்கியமும்.

நாம் இதுவரையில் பிராமணனுக்குப் பார்த்தமாத்திரத்திலறியக்கூடிய மூன்று முக்கியமான வெளியடையாளங்களைப்பற்றி ஒருவாறு சொல்லிவந்தோம். நான் பிராமணர்களை மாத்திரம் பார்த்து இவ்வளவு கண்டிப்பாய்ச்சொல்ல முக்கியகாரணமென்னவெனில் பிராமணன் தற்காலநிலைமைகளை யனுசரித்தமட்டிலாவது அவனுக்கு ஏற்பட்டதர்மங்களை வெளிப்புறத்திலும் உள்ளும் சரியாய் அனுசரித்து நடத்திவந்தானானால் மீதியிருக்கும் ஹிந்துஜன சமூகங்கள் வர்ணாச்ரமதர்மத்தைப் பற்றியும் பிராமணனைப் பற்றியும் என்ன எளனமாய் நினைத்தாலும் அல்லது பேசினாலும்கூடத் தங்களுடைய தர்மாசார நடவடிக்கையில் அவர்கள் அபிவிருத்தியடைவார்களென்று எனக்குப் பூர்ணநம்பிக்கை யிருப்பதுவேதான். வர்ணாச்ரமதர்மத்தையும் பிராமணனையும்பற்றி இக்காலத்தில் தூஷணை கிளம்பியிருப்பதற்குப் பிராமணனுடைய தவறுதல்களும், பிராமணனுடைய குற்றங்களுமே முக்கியஜவாப் என்பது உண்மையென்பதைக் கேட்க நமக்கு எவ்வளவு அஸந்தோஷகரமாயிருந்தாலும் நாம் அதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. பிராமணனாயிருந்து அப்பிராமணவாழ்க்கையைக் கைக்கொண்டதன் கொடியபலன்களைப் பிராமணன் அனுபவிக்க வேண்டியிருப்பது சரியான நியாயமாகத்தானிருக்கிறது. அவன் மிகவும் அவச்யகரமான சாஸ்திரவிதி கர்மங்களைக்கூடச் சரியானபடி செய்யத்தவறினதனாலும், தனது பிராகிருத சரீரத்திற்கு மேலாக ஒன்று இருப்பதாக நினைவேயில்லாமலும் அந்த தேகத்திற்குள் தேகியாகிய ஆத்மாயிருப்பதை முற்றும் மறந்தும் சரீர சம்பந்தமான சவுக்கிய சுகவாழ்வே பெரிதென்று உத்தியோகங்களைக் கைக்கொண்டதினாலும், தன்னிடத்தில் அந்தர்கதமாயிருக்கும் பிராம்மண்யத்தை அவன் மிகவும் அசக்தமாக்கிக் கொண்டிருக்கிறான். பார்க்கப்போனால் அவன் தன்னுடைய சரீர இந்திரியங்களுக்குதன்னை அடிமையாக்கிக்கொண்டிருக்கிறான், தன்னு

டைய பலவித துர்ஆசாரத்தோடு நில்லாமல் அனேக இடங்களில் முக்கியமாய் மலையாளதேசத்தில் அவன் தன்னுடைய துர்நடத்தையினாலே பிரும்மத்வேஷம் உண்டாகுமாறுசெய்துகொண்டிருக்கிறான். துர்நடத்தைகளுக்கு இன்னின்னபலனென்று சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதற்கு இக்காலத்தில் பிராமணர்கள் மீது பிராமணரல்லாதாரின் தர்ம விரோதமானபகை மூண்டகிளர்ச்சிகள் ஏற்பட்டுவிட்டதே அத்தாக்ஷியாகும். இது அர்த்தகாமாதுர்களாகிய பிராமணாளுக்குத் நீராத மானக்கேடான அபகீர்த்தியே ஆகும். நான்சொல்வதை தப்பபிப்பிராயப்படக்கூடாது. இந்த சரீரசம்பந்தமான உலகத்தில் பிராமணனுடையதத்வஞான சாதனமாகிய நிலைமையை அவனுக்கு ஞாபகமூட்டவேண்டுமென்பதுவே எனது கருத்து. அப்படிஞாபகமூட்டுவதில் அவன் தன்னுடைய உன்னதப்பதவியிலிருந்து அனியாயமாய் நழுவியிருப்பதைப்பார்த்து நான்கடுமையாய்ப் பேசாமலிருக்க முடியவில்லை. ஆகையினால் நான் மன்னிப்புக் கேட்கவேண்டியதில்லை. என்றாலும், மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(2) ஆனால் நம்முடைய தர்மமார்க்கஸ்தாபனத்தை நிலைநிறுத்தும் பெரியகாரியத்தைச் சாதிக்கும்விஷயத்தில் இந்தக்காலமிருக்கப்பட்ட நிலைமைகளையும், நிர்ப்பந்தங்களையும் நாம் ஆலோஜிக்காமல் அலக்ஷியம் செய்யக்கூடாது. இப்போது நமக்கு ஸ்பஷ்டமாய்த்தெரியும் சூழ்சிகளை ஆலோஜனையிலெடுத்துக்கொண்டு சிலமுடிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளை நிறைவேற்றும் பக்ஷத்தில் உங்களுக்குச் சில கடைசியானவார்த்தைகளைச் சொல்லிவிட்டு எனது உபன்யாஸத்தை நான்நிறுத்திக் கொள்ளுகிறேன். உங்களில் அனேகர் பௌதிகவாதம், ஒன்றிலும் விச்வாசமின்மை, சிற்றின்பபோகம் நாஸ்திகம் முதலிய ஆத்மசம்பந்தமல்லாத கீழான நோக்கங்களின் சக்திக்கு விரோதமாய் எதிர்த்துச் சண்டைசெய்ய ஆத்ம சம்பந்தமான வ்யவகாரங்களடங்கிய ஆரிய கைங்கரியத்தில் ஆழ்ந்தகருத்துடன் அமர்ந்திருக்கிறீர்களென்று நம்பியே உங்களுக்குச் சிலகடைசியான வார்த்தைகளைச் சொல்லக்கடமைப்பட்டு முன்வந்தேன். மேற்கண்ட கீழ்மையான நோக்கங்கள் கொஞ்சகாலம் சரியான ஏற்பாடுபோலவும் வல்ல

மையுள்ளவைபோலவும் காணப்பட்டுக்கொண்டு உலகவாழ்க்கையின் கொழுப்பினுல் கண்தெரியாமல் அறிவீனத்தால் அப்போதைக்கப்போது வாக்குவல்லபத்தோடு கோஷம் செய்தாலும் கடைசியில் குறியில்லாத வீண் குழப்பத்தில் அலைந்தலைந்து அலுத்து ஸாரமில்லாதுசிதரப்போகும்படிமுடிவில்கட்டாயம்நேரிடும்.

(3) ஆகையால் நான் உங்களுக்குக் கடைசியாய்ச்சொல்வது என்னவெனில்:—ஆதியில்லாத ஜனனமரணச்சுழலில் வெகுகாலம் துன்பத்திற்கும் பந்தத்திற்கும் உட்படுத்தப்பட்ட நிலைமையிலிருந்து கடைசியாய் விடுதலையடைதலென்னும் மோக்ஷமாகிய குறியானபலனை (பிர்மவித்தையைச் சரியாய்க்கைக்கொண்டு உபயோகிப்பதனுல்) அடையும் மார்க்கத்தை நமக்குக் காட்டிக்கொடுக்கும் சாஸ்திரத்திலும், எல்லாரையும் ரக்ஷிக்கும் நம்முடைய வைதீக மதத்திலும் உலகத்திலுள்ள எல்லாரைக்காட்டிலும் பிராமணர்களாகிய நீங்களாவது கட்டாயம் முழுநம்பிக்கை வைக்க வேண்டும்.

பிராமணர்களாகிய நீங்கள்தான் வேதங்களினுடைய பொறுப்பான ஸம்ரக்ஷகர்களாயிருக்கிறீர்கள். உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மார்க்கங்களால் உங்களைச்சூழ்ந்திருக்கும் மானிடக்குலத்தின் இந்திரியவசமான அறியாத்தனமுள்ள ஜனசமூகங்களைக் கல்விப்பயிற்சி செய்து கைதூக்கிவிடும் கடமையை ஈச்வரன் உங்களுக்குக் கொடுத்திருக்கிறுர். மதவிஷயத்தில் உங்களுடைய இனத்தாருக்கிருக்கும் அறிவும் ஆசாரணையும் பெரிதும் குறைவாயிருக்கிறதென்று கண்டுகொண்ட அவர்கள் உங்களைக் கொஞ்சம்கூடச் சட்டைசெய்யவில்லையென்றும், அவர்கள் இரக்கமில்லாமலும் அகந்தையுள்ளவர்களாயும் முரணுனவர்களாயும் கூட ஆய்விட்டார்களென்றும், இப்போது அவர்கள்பேரில் நீங்கள் புகார்சொல்லும் பக்ஷத்தில் அப்படி அவர்கள் ஆய்விட்ட தப்பிதத்திற்கு நீங்களேதான் ஜவாப்தாரிகளென்றும் நான்சொல்லுகிறேன்.

நீங்கள் உங்களது தர்மமாகிய உயர்ந்த பதவியிலிருந்து நழுவினீர்கள். சரீர சம்பந்தமான போட்டிநிறைந்த சிற்றின்ப வாழ்வையுடைய உலகமார்க்கங்களில் நீங்கள் எப்போது தீர்க்காலோ

சுணையில்லாமல் நழுவி விழுந்தீர்களோ அப்போதே கெடி. இனத் தார்களோடு நீங்கள் முட்டிக்கொள்ளாமலிருக்க எப்படி முடியும்?

" தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை" என்பது திருக்குறள்

அப்படி நீங்கள் கீழ் நழுவாத பக்ஷத்தில் அவர்கள் இன்னும் உங்களுக்கு அடங்கிய மாணாக்கர்களாய் இருந்தே வருவார்கள். நீங்கள் கீழேநழுவினதானது விலக்கக்கூடாதசம்பவமென்று ஆயிரம் சாக்குகள் சொல்லி வாதிப்பீர்களென்பது மனித சுபாவந்தான். அப்படிப்பட்ட சாக்குகளில் அனேகம் உண்மையிருக்கலாமென்பதற்கும் சந்தேகமில்லை. ஆனாலுங்கூட நீங்கள் உங்களது ஸ்தானத்திலிருந்து நழுவிவிட்டீர்கள் என்பதும் அதுவும் உங்களுடைய பழைய அந்தஸ்திற்குச் சீக்கிரமாயாவது சுளுவாயாவது எழுந்திருந்து ஏறவகையில்லாதபடி அவ்வளவு தாழ்ந்தஸ்திதிக்கு நழுவி விட்டீர்களென்பதும் வாஸ்தவமே யல்லவா? பழையகாலப் பிராமணர்களுடைய நிலைமைக்கு எவ்விதத்தினும் சமனாக ஆவது நமக்கு அசாத்யம் போலிருக்கிறது. இந்த உலகமானது நாலு லக்ஷத்தி முப்பத்தீராயிரம் வருஷங்களடங்கிய இந்தக் கலியுகம் முற்ற முற்ற வைதீகமான சுறுசுறுப்பிலிருந்து இளைப்பாறுவது போல் அறியாமையாகிய தூக்கத்தில் நீண்டகாலம்ஒடுங்கியிருக்க வேண்டுமென்று ஈசுவரன்சங்கற்பித்திருப்பதாய்த் தெரிகின்றது. ஆத்மசம்பந்தமான பிரவர்த்தி தூங்கிக் கொண்டிருக்கும்போது சரீரசம்பந்தமான பிரவர்த்தி சந்தடி கோஷம் செய்வது சரியான இயற்கை தானே. ஜீவாத்மாவாகிய ஒருவன் எவ்வளவுக்கு அதிக நித்திரை கொள்ளுகிறானோ அவ்வளவுக்குச் சரீரத்தில் சரியான காலங்களில் அடக்கி நிர்வகிக்கும் அப்யாஸமில்லாத பக்ஷத்தில் கோஷமான கொரட்டை அதிகரிக்கின்றது. அந்த கொரட்டை எவ்வளவு கடூரமாயும் ஸ்மரணை தப்பினதாயுமிருந்தாலும் அதைப் பற்றிப் புகார் செய்வதில் பிரயோஜனமில்லை. உங்களுடைய துடுக்கான இனத்தார் மேல் புகார் செய்வது இந்தக் கலியுகத்தில் உங்களுடைய ஆத்மசம்பந்தமான நித்திரையில் விடும் கொரட்டையில் ஒரு பாகமென்னலாம். உங்களுடைய தேசத்தையும் உங்களுடைய ஜனங்களையும் பற்றின வைதீகமான நிலைமைகளின் பே

ரிலும் சூழ்ச்சிகளின் பேரிலும் உங்களுக்கு எவ்வித ஆதினமும் கிடையாதென்பது வாஸ்தவமே. உங்களுடையமஹான்களாகிய ருஷிகள் பிராம்மண்யமானது வரவர நிச்சயமாய் க்ஷீணிக்குமென்றும் அதுபற்றி பிராமணர்களில் அனேகர் பிராமணராயிராமல் முற்றிலும் நழுவி விடுவார்களென்றும் இந்த யுகத்தின் அந்தத்தில் உண்மையான பிராமணர்கள் சிற்சில குடும்பங்கள் தான் மீதியிருப்பார்கள் என்றும் அவர்களே தூக்கந்தெளிந்து எழுந்திருப்பவர்களைப்போல வருகிற முழு தர்மகாலமாகிய கிருதயுகத்தில் வேலை செய்யும்படியான உத்தமகுண பிராம்மணசமூகத்தை உண்டாக்கி விருத்திசெய்ய விதைபோல் உதவுவார்களென்றும்முன்னமேயே கூறியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நான் உங்களுக்கு ஏன் சொல்லுகிறேனென்றால் நீங்கள் பிராம்மண்யமே யில்லாமல் அழிந்துபோக இருக்கும் பிராமணர்களின் பெரும்பாலோரைச் சேரவிரும்புகிறீர்களா அல்லது இந்த யுகம் முடியும் வரையில் மோக்ஷமடையாமலிருந்தாலும் அதிகமான தர்மப் பிரவிர்த்தியினாலும் வைதிக அபிவிர்த்தியாலும் அப்படி மோக்ஷமடைகிறதற்குக்கிட்டத் தட்ட அருகர்களாயிருந்து கொண்டு சத்ய யுகமாகிய கிருதயுகத்தில் அந்த யுகத்திற்குரிய மேலான யுகதர்மதைச் சரியாய் அனுஷ்டிக்க வேண்டிய முறைகளும் சத்யமார்க்கங்களும் இன்னின்னவென்று அறிந்து வரப்போகும் சந்ததிகளுக்கு எடுத்துக்காட்டும் பெரியோர்களாக மறுபடி ஜனிக்க லாயக்குள்ளவர்களாயிருக்கும்படி மேலும் மேலும் அபிவிர்த்தியடையும் சாஸ்திர ஞானம் வாய்ந்த சிறுபாலோருடைய கோஷ்டியில் சேரவிரும்பிகிறீர்களா வென்பதை நன்றாய் ஆலோசியுங்கள் என்பதை எடுத்துக்காட்டவே நான் சொல்ல வந்தேன். இந்த விஷயத்தைப் பற்றி ஆவலோடு விசாரிப்பவர்களுக்கு அநேக கேழ்விகள் மனத்தில் உதயமாகும். அவைகளை யெல்லாம் நானே எடுத்து விஸ்தாரமாய்ச் சொல்ல இப்போது அவகாசமில்லாததால் அப்படி விசாரிக்க ஆவலுள்ளவர்கள் சாவகாசப் பட்டபோது பிராம்மணன் என்பது பிறப்பினாலா குணத்தினாலா என்பது போன்ற தனக்குத்தோன்றும் கேழ்விகளையும் ஸம்சயங்களையும் வாதம் செய்து நிவர்த்தித்துக் கொள்ளலாம்.

(4) பிராமண்யத்தை நம்மிடத்தில் காப்பாற்றிக் கொள்ள நாம் செய்யவேண்டியதென்னவெனில் நம்முடைய மனதுள்ளூர ச்சுத்தத்தையும் பெருக்கத்தையும் வெளித்தோற்றத்தில் சரீரசுத்தியையும் மிகவும் ஜாக்கிரதையாய்க் காப்பாறறி வரவேண்டியது. உண்மையான ஹிந்து வைதிகக் கொள்கைக்கு அவச்யமேயில்லாத முற்றிலும் உலகவாழ்க்கை சம்பந்தமான காரியங்களுக்கும் கிளர்ச்சிகளுக்கும் அவச்யம்போல் நினைத்து விருதுகளையும், பில்லைகளையும், த்வஜங்களையும், உடைக்கோலங்களையும், ஸ்வபக்ஷவரத்தையும் அபேக்ஷித்துத்தேடும் இந்நாளில் ஹிந்துவின் தோற்றத்திற்கு அத்யாவச்யமான வெளியடையாளங்களாகிய சாதாரணதேசாபிமான உடையைக்கட்டவேண்டிய முறைகளையும் சிகைபுண்ட்ரம், யஞ்ஞோபவீதம்போலொத்த குறிகளையும் கண்டிப்பாய் அனுஷ்டிக்கச்சொல்லிக் கட்டாயப்படுத்துவது ஒரு தகாத காரியமாகுமா? இவைகளைக் காப்பாற்றுவது உங்களுடைய சொந்த நன்மைக்காகவும் சாஸ்திரதர்ம மார்க்கத்தால் உயிர் வாழ்க்கையின் பலனைப்அடையவேண்டியஆத்மாவின் மோக்ஷஸாதனத்திற்காகவுமே உங்களுக்கு முக்கிய ஆவச்யகமாயிருக்கின்றது. உங்களது சமூகத்தில் அநேகர் மேற்கண்ட வெளித்தோற்றக் குறிகளை ஒன்றொன்றாய்க் கைவிட்டு வருகிறார்களென்பதைப் பாத்து நீங்கள் துயரப்படவேண்டிய அவச்யமில்லை. ஏனென்றால் அவர்களுடைய வாழ்க்கையின் குறியெல்லாம் கூடி மிருகப்பிராயமான காம சுகமும் சரீரசம்பந்தமான அர்த்த மூலமானசௌகரியமுமே யாகையால் உங்களுடைய வாழ்க்கைக் குறிக்கு அது முற்றிலுமே வேறுபட்டிருக்கிறது. அவர்கள் எத்தனைக்கு எத்தனை சரீரத் தோற்றங்களை நம்முடைய தோற்றத்திலிருந்து வேறு படுத்திக் கொள்ளுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு நமக்கு க்ஷேமமென்றும் அவர்கள் அப்படிச் செய்துக் கொள்வதைச் சீக்கிரத்தில் நிறைவேற்றிக் கொள்ளவேண்டு மென்றும் நாம் ஈச்வரனைப் பிரார்த்திக்க வேண்டுமே யொழிய விசனப்பட நியாயமில்லை. ஆகிலும் ஹிந்து விரோதிகள்போல மேலுக்குக் காணப்பட்டாலும் நாம் அவர்களுடைய தவறுதல்களிலிருந்து அவர்களை உய்விக்க நெருங்குவது பிரயோஜனப்படுமென்று எண்ணக் கூடிய

தான ஆசாமிகள் யார் யார் இருக்கிறார்களென்று நாம் தேடிக் கண்டு பிடிக்கலாம். இப்படி உபகாரம் செய்ய நாம் இறங்குவதில் ஏதாவதுஏமாராமல் வந்தாலும் வரட்டுமென்று நாம்தயாராய் இருக்க வேண்டியதுதான். நாம் ஜெயிக்க மாட்டோமென்று சம்சயித்தபேர்வழிகள் விஷயத்தில் நீங்கள் எதிர்பாராத ஜயமடைந்தாலும் அடையலாம். ஜயம் வருமென்று எண்ணி நிச்சயித்த இடங்களில் தோல்வியடைந்தாலும் அடையலாம்.

---

## 6 பிரகரணம்.

## பிராமணன் அனுஷ்டிக்கவேண்டிய தினவரிக் கடமைகள்.

நம்மைப் பொறுத்தமட்டில் நம்முடைய பிராம்மண்யத்தைக் காப்பற்றவேண்டிய விஷயத்தில் நாம் அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இனிமேலும் நாம் அதில் அலக்ஷியமாயிருந்தோமானால் அது நசித்துப்போக இடமுண்டாகும். அநேகரிடத்தில் முன்னமேயே அது தொலைந்துபோய்விட்டது. ஒவ்வொருவரும் கவலை எடுத்துக்கொண்டால்தான் அது காப்பாற்றப்படக்கூடும். பிராம்மணசமூகத்தின் க்ஷேர்மையானது அப்படிப் பிரயத்தினம் பண்ணுகிற ஒவ்வருவரவது ஜயத்தைப் பொறுத்து நிற்கின்றது. அதற்கு ஒழுங்குப்படுத்தப்பட்ட ஆலோசனை மகாநாடு கூடித்தான் ஆகவேண்டுமென்று நீங்கள் தப்பபிப்பிராயம் கொள்ளாதேயுங்கள். எந்த சமூகங்களும், ஸ்தாபனங்களும், ஆள்கூட்டபலத்தையும், அதைச்சேர்ந்தோரின் சரீரசம்பந்தமான வாழ்வையுமே கதியென நம்பி நிலைநிற்கின்றனவோ எந்த சமூகங்களும் ஸ்தாபனங்களும் அழிவில்லாமல் சாச்வதமாய் நின்றுவரும் ஆத்மஉஜ்ஜீவனவழியை ஆதாரமாய்க் கைக்கொண்டிராமலும் ஒப்புக்கொள்ளாமலும் இருக்கின்றனவோ அப்பேர்ப்பட்ட சமூகஸ்தாபனங்களுக்கே தத்காலம் எங்கு பார்த்தாலும் வழங்கும்மகாநாடுகூடும் பைத்தியம்பிடித்திருக்கட்டும். ஒவ்வொரு பிராமணனும் தனித்தனியே நித்ய நைமித்ய கர்மங்களினுடை

யவும், அவரவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் உபாஸனைகளுடைய வுமான ஆசாரங்களைப் பற்றின சாஸ்திரங்களின் அதிமுக்யமான வைகளையாவது நழுவவிடாமல் அனுஷ்டித்துவரும் பக்ஷத்தில் நம்முடைய பிராம்மண்யமும் நம் ஒவ்வொருவரிடத்திலும் ஸ்திரமாய் நிற்கும். நம்முடைய சமூகமும் பத்திரமாயும் அபாயத்திற்குள்ளாகாதபடியும் நிலைத்து நின்றுவரும். அப்படி முக்யமான கர்மங்களும், உபாஸனைகளும், ஆசாரங்களும் எவையெவையென்பதைச் சுளுவில் கண்டுபிடித்துக்கொள்ளலாம். நம்முடைய நித்ய கடமைகளுக்குள் பின் விவரிக்கபபடும் கடமைகளை நாம் கருத்தோடு ஜாக்கிரதையாய் நடத்திவந்தால் நம்முடைய பிராம்மண்யம் நாசமடையாதென்று மட்டும் இப்போது நான் உங்களுக்கு எடுத்துச்சொன்னால் போதுமென்று நினைக்கிறேன். அவைகள் யாவெனில்

(1) சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட பிரகாரம் அதிகாலையில் எழுந்திருப்பது; குறித்த காலங்களிலும், ஒரேவிதமான இடைவெளிகளிலும் தேக ஆரோக்யமான காரியங்களைச் செய்வது முதலிய வழக்கங்களை ஒழுங்காய் அனுசரிப்பது.

(2) சௌசம் ஸ்நானம் இவைகளைப்பற்றின விதிகளைப் போன்ற சரீரசம்பந்தமான ஆசாரத்திற்குரிய சாஸ்திரவிதிகளைக் கிரமமாய் அனுஷ்டிப்பதாலும் ஸ்பரிசத்தினாலும், நெருங்குவதினாலும், மற்ற விஷயங்களாலும் நேரிட்டிருக்கக்கூடிய தீண்டலை நிவர்த்தித்துக்கொள்வதாலாகிய தேகசுத்தியைச் செய்துகொள்வது வேண்டுமென்றோ அல்லது தெறியாமலோ மற்றவர்களால் செய்யப்படும்படி நாமே வரவழைத்துக்கொண்ட அல்லது மூடத்தனமாய் விடப்பட்ட தீட்டு அனாசாரம் அல்லது கெட்ட துராசாரத்திலிருந்து உண்டாகும் சில அனர்த்தமான அசுசிகளே

முற்றிலுமாவது அல்லது ஒருவாறுவது நம்முடைய கிருகங்களில் நேரிடும் அனேக தொல்லையான சம்பவங்களுக்கு நேர் காரணங்களாயிருக்கின்றன என்று நான் சொல்வதை நீங்கள் நம்புங்கள். தேகாரோக்கிய சாஸ்திரமானது ஒருவன் தன்னைத்தானேயும் தனது சரீரத்தையும், தன்னைச் சுற்றுமுள்ள சூழல்களையும்

அப்பேர்ப்பட்ட அனுசார னுசாரங்களின் சக்தியிலிருந்து காப்பாற்றிக்கொள்ளும் சாஸ்திரமேயாகும். ஹிந்துசாஸ்திர ஆசாரவிதிகளை அனுசரித்துத் தேகாரோக்கியத்தைப் பற்றின நம்முடைய கொள்கைகளை நம்மில் அநேகர் திருத்திக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

(3) நாம் ஸந்தியாவந்தனம் மாத்யான்னிகம் இவைகளை அவரவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற பிரகாரம் கட்டாயம் செய்ய வேண்டியது (ஒவ்வொரு தடவையிலும் முந்திப்பிந்தியுள்ள உப மந்திரதந்திரங்களுடன் பத்து காயத்திரிக்குக் குறையாமலாவது பண்ணினாலும் போதுமானது. இதனால் விட்டுவிடலாகாது என்பது கருத்து.)

(4) பிரம்மயக்ஞமும் அவச்யந்தான். இதுவரையில் உங்களில் சிலர் அதை நியமமாய்ச் செய்யாதிருக்கும்பக்ஷத்தில் அவர்கள் தங்கள் நித்யதர்மகர்மங்களில் அதையும் ஒன்றாய் உடனே சேர்த்துக்கொள்ளவேண்டும். நீங்கள் தேகசுத்தமாயிருக்கும் போது அந்த பிரம்மயக்ஞத்தைச் செய்யவேண்டும். உங்களுடைய காலை ஸந்தியாவந்தனம் பண்ணியானவுடனேயே அதில் தேவருஷி பிதுர்தர்ப்பணம் நீங்கலாக மற்றதைச் செய்துவிடலாம். தேவருஷி பிதுர்தர்ப்பணத்தை மட்டும் மாத்யான்னிகம் பண்ணியானபிறகு செய்துகொள்ளலாம்.

(5) நம்மில் அநேகருக்கு இப்போதிருக்கப்பட்ட சௌகரியங்களை உத்தேசித்து நாம் ஔபாஸனமந்திரங்களையும், பிர்ம்மசாரியாயிருக்கப்பட்டவர்கள் ஸமிதாதான மந்திரங்களையும் ஒவ்வொரு காலையிலும் சந்தியாவந்தனமான உடனேயே பார்க்காமல் ஒப்பித்தாவது விடவேண்டும். தனக்கு உரித்தான வேதத்தில் ஒரு பாகத்தையாவது அத்யயனம் செய்திருக்கவேண்டும். வேதமோதாத பிராமணன் நாலாவது தலைமுறையில் பிராம்மண்யத்தை இழந்துவிடுவானென்று ருஷிகளால் சொல்லப்பட்டிருக்கின்றது.

(6) மற்ற சிராத்தம், தர்ப்பணம், உபநயனஸம்ஸ்காரங்கள் உத்தரகிரியை முதலிய பிராமணர்களுக்குரிய எல்லாக்கர்மங்களை

யும் விதிப்படி பக்தி சிரத்தையோடு செய்துவரவேண்டும். மந்திரங்களைச் சரியாயுச்சரிக்க ஸம்ஸ்கிருதத்தைப் பால்யத்திலேயே படித்திருக்கவேண்டும். அப்படிப் படிக்காது தவறிப்போயிருப்பவர்களும் சுளுவில் கிரந்தஎழுத்தைக் கற்றுக்கொள்ளலாம். வாசிக்கத்தெரிந்தால் அதுவே சாஸ்திரங்களையும், மந்திரங்களையும் படித்துக் கற்றுக் கொள்ளத்தூண்டும் சாதனமாகும். சந்தியாவந்தனபரீக்ஷை மற்றஸ்கூல்பரீக்ஷைகளோடு வருஷத்தில் ஒருதரங்கூட நடத்தப்படாததினால் அதனை மறந்துபோன பையன்களும் இக்காலத்திலிருப்பார்கள். அப்படிப்பட்ட சிலருக்குக் கொஞ்சம் வயதுவரவே ஸந்தியாவந்தனத்தை முழுவதும் செய்யவேண்டும் என்று மனதில் அக்கரையும் ஆசையும் உண்டாகியும் மந்திரமே மறந்து போனதினாலும் புதிதாய்க் கற்றுக்கொள்ளப் பிறரைக்கேட்கவேண்டுமே என்றவெட்கத்தினாலும் மஹா விபஸனத்தோடு இருப்பவர்கள் கிரந்தாக்ஷரத்தைச் சுளுவாய்க் கற்றுக் கொண்டால் எல்லாப்புஸ்தகக்கடைகளிலும் விற்கப்படும் ஆன்னிக சந்தியாவந்தனம் முதலிய புஸ்தகங்களை வாங்கி ரகஸியமாய்க் கற்றுக்கொண்டு பிறகாவது சந்தியாவந்தனம் முதலிய கர்மாவை முழுதும் நல்ல உச்சரிப்போடு சொல்லித் தினம் தவறாமல் நடத்த வழியுண்டாகும். தனது மதத்திற்கு வேண்டிய ஸம்ஸ்கிருதப் படிப்பையும் தனக்குறியவேத அத்யயனத்தையும் ஐந்தாவது வயதுமுதல் பன்னிரண்டு வயதிற்குள்ளாகவே ஒருவாறுவது கற்றுக்கொண்டபிறகே அன்யதேசபாஷையைக் கைப்பற்றலாமேயொழிய ஹரி: ஓம் என்பதைக்கூடக் கற்றுக்கொள்ளாமல் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்திற்குகுழந்தைகளைக் கறகவிடுவதை விட்டொழிக்கவேண்டும்.

7. உங்களது ஆகாரத்தை வகையிலும், சுத்தத்திலும், அளவிலும் தினந்தோறும் இத்தனை தரமென்பதிலும், சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதை முற்றிலும் அனுசரித்து உட்கொள்ளுவதில் நீங்கள் விசேஷ ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டும். உங்களுடைய ஆகாரம் நாளடைவில் முழுவதும் ஸாத்விக வகையாய் மாறும்படி செய்யப்படவேண்டியது.

(8) நீங்கள் உங்களுடைய தோழர்களையும், லக்ஷுவாய்ப் படிப்பதற்கான புஸ்தகங்களையும் உங்களுடைய சரீரசம்பந்தமானதும் நீதிநெறிக்குரியனவாயுமுள்ள வழிகளையும் சரியானபடி பொருக்கிக்கொள்வதிலுங்கூட அதேமாதிரி ஜாக்கிரதை எடுத்துக்கொண்டு உங்களுடைய மேல்நோக்கிய அபிவிர்த்திக்கு இவைகளெல்லாம் உபகாரமாயிருக்கின்றனவா என்பதை நீங்கள் கவனித்துப் பார்த்துவரவேண்டும். அதற்கு விரோதமான புஸ்தக பாடங்களை ஒழிக்கவேண்டும்.

(9) விவாகமாகாத வாழ்க்கையின் கண்டிதமான பிர்மசரியத்திலும் சரி, அல்லது விவாகமான பிறகு கிரஹஸ்தவாழ்க்கைக்குத் தகுதியான பிர்மசரியத்திலும் சரி, பிர்மசரியமாகிய ஆண் பெண்ணிற்குரிய சரீரத்தினுடையவும் மனதினுடையவும் ஆன சுத்தத்தை நீங்கள் நன்ருய்க் காப்பாற்றுங்கள். நீங்கள் நியாய விரோதமான ஆண் பெண்ணிற்குரிய ஆசையூட்டும் மயக்கத்திற்கு ஒருக்காலும் இடங்கொடாதேயுங்கள். மனிதனை உய்விக்கும் உண்மையான காரியத்திற்காகவே மனிதத்தன்மையைக் கெடாமல் காப்பாற்றி வைத்துக்கொள்ளுங்கள். அப்படிச்செய்வதுதான் உங்களுடையவும் மானிடப் பிரகிருதிக்குரியவுமான ஆத்ம உன்னதியின் க்ஷேமத்திற்காக சாஸ்திரத்தில் விவரித்த தர்மக்கிரியையைச் சரியாய்ப் பூர்த்திசெய்யும் மார்க்கமாகும்.

(10) உங்களுடைய வெளித்தோற்றத்தில் எப்போதும் திட்டமான ஹிந்துவாய்க் காணப்படவேண்டுமேயொழிய நீங்கள் ஆரிய மார்க்கமல்லாத வீண் ஒயில்தனத்திற்கு ஒருகாலும் இரையாக நழுவக்கூடாது.

(11) மொத்தத்தில் ஸ்வதேசாபிமானம், கபடமின்மை, சத்தியம் சுத்தம், யோக்கியம், தைரியம், தாய், தந்தைகுரு, முதலிய பெரியோர்களுக்கு மரியாதை, வணக்கம் எல்லாரிடத்திலும் இரக்கமுள்ள அன்பு வேதசாஸ்திரங்களிலும், வேதசாஸ்திரமறிந்தவர்களுடைய வாக்கியத்திலும்நம்பிக்கை, வியவகாரத்திற்கிசைந்நடத்தையில் மேற்கண்ட வாக்கியங்களிலும் சாஸ்திரங்களிலும்

கண்டிதமான பற்றுதல் என்ற இவை இந்தவாழ்க்கையில் உங்களுக்கு வழிகாட்டும் பிரமாணங்களாய் விளங்கட்டும். இப்படிச் செய்தால் உங்களுடைய பிராம்மண்யம் தான் நிலைப்பது மாத்திரமேயில்லாமல் மிகவும் விஸ்தரித்த பரிமாணத்திற்கும் சீக்கிரம் விருத்தி ஹேதுவாகும். அந்தப் பிராம்மண்யமானது உங்களுடைய மேன்மைப் படுத்தும் தர்மத்தினுடையவும், கைதூக்கி விடும் உபாஸனையினுடையவும் ஆன பலத்தை ஆதாரமாகக் கொண்டு பெரிய ஆத்மாக்களுடைய சேர்க்கையால் உங்களுடைய சக்தியானது பெருகி தத்வக்ஞான விஷயத்தில் இருட்டில் தடுமாறும் உங்களுடைய சகோதரர்களுக்கு உதவிசெய்யும் திறமையையும் உண்டாக்கும். நீங்கள் உங்களுடைய ஜனனமுறை உரிமையினாலேயே அப்படி அன்னியருக்கு உதவிசெய்ய லாயக்குள்ளவர்களாயிருக்கிறீர்கள். நீங்கள் தர்மமார்க்கத்தை அனுஷ்டிப்பதில் கொஞ்சம் உற்சாகமெடுத்துக் கொண்டால், வேதங்கள் மூலமாய் வெளிவரும் தத்வக்ஞானத்தைச் சுலுவாய்க் கைப்பற்றத்தக்க எல்லா வழிகளும் புலனாகும். சரியான மார்க்கத்தில் நீங்கள் மட்டும் அக்கரைப்பட்டுப் பிரவர்த்தித்தீர்களானால் கட்டாயம் நீங்கள் முன்னுக்கு வரலாம். எல்லையில்லாக் ஞானத்திற்கும், சூக்ஷ்மபுத்திக்கும் பேர்போனவல்லமை மிகுந்த பூர்விக ரிஷிகளுடைய பரம்பரையில் நீங்கள் நேராய் ஜனித்து வந்திருப்பவர்களென்பதை மறக்கக் கூடாது. எல்லா ஜீவராசிக்கும் உதவி செய்வதற்காகவே ஏற்பட்ட உண்மையான பிராமண வாழ்க்கையின் சிறந்த மார்க்கத்தில் என்னென்ன இடைஞ்சல்கள் எதிர் வந்தாலும் நீங்கள லக்ஷ்யம் செய்ய வேண்டாம். மற்றவர்களுடைய அறியாமையும், தப்பபிப்பிராயமும் ஆகிய மேகமானது எவ்வளவு கறுத்திருண்டு வந்தாலும்கூட உங்களுடைய காயத்ரீஉபாஸனையாகிய வல்லமையுள்ள ஆத்ம ஞான மார்க்கமாகிய சூரிய ஜோதியின்முன் அவை நீடித்து வெகுநாள் நிற்கமாட்டா.

---

## 7 பிரகரணம்.

## பிராம்மண்யத்தின் நிலைமையைக் குறித்து அதைர்யம் வேண்டாம்.

(1) பிராம்மண்யததிற்கு அநர்த்தகாலம் சம்பவித்துவிட்டதென்று சிலர் சொல்லுவார்கள். அப்படி ஒருநாளும் வரவே மாட்டாது. பிராம்மண்யமானது சாச்வதமாய் ஸம்ரக்ஷிக்கப் பெற்று நிலைநிற்க யோக்கியதையுள்ளதுதான என்பதை நன்றாயும் கண்டிப்பாயும் நிச்சயம்செய்யும் காலம் நேர்ந்திருப்பதாய் மாத்திரம் சொல்லலாமேயொழிய வேறில்லை.

(2) நமக்குள் நாளடைவில் கலந்துபோயிருக்கும் பதரைத் தூற்றி நல்லது பொல்லாததைத் தனித்தனியாய்ப் பிரித்தெடுக்கும் காலம்வந்திருப்பதாய்ச் சொல்லலாம்.

(3) பிராமணர்கள் அனேகர் பிராம்மண்யத்தை உதாஸீனமாய் விட்டிருப்பினும் பிராம்மண்யமென்பது ஒருகாலும் அழிவையடையாது. அது நிலைநிற்குமென்பதில் சந்தேகமில்லை.

(4) உங்களில் சிலர் வழிதப்பிச் செல்லும் தப்பு அபிப்பிராயமுள்ள ஸோஷல் ரிபார்ம்காரர்கள் சொல்வதைக்கேட்டு அவர்களுடன் சேர்ந்து ஏககோஷம்போட்டு உங்களுடைய புராதன பரம்பரை ஆசாரங்களைக் கைவிட்டு பிராமணத் தன்மைக்கு பூர்ணன பிராமணகிருத்தியங்களைச் செய்தாலும்கூடப் பிராம்மண்யமென்பதை ஒழிக்க அவர்களால் ஒருகாலும் சாயாது.

(5) பிராம்மண்யத்தை ஓர் இடத்தில் சிலர் கைவிட்டாலும் மற்றோரிடத்தில் அது பிழைத்திருந்து கொழித்து நிற்கும். சிலர் வேண்டுமானுல் அதிலிருந்து நழுவிக்கொள்ளலாம், அப்படி நழுவிக்கொள்வது ஒரு சாமர்த்தியமல்ல.

(6) முதலாவது உங்களுடைய நிலைமையை யோஜியுங்கள். ஆதிபூர்வகமான வைதிக மதமாகிய உங்களது ஆரியமதமானது புத்தியில் பலதினிசு பக்குவமுள்ள எல்லாஜனங்களையும் கடைத்தேறச் செய்விக்கும் மகிமை வாய்ந்தது. அதில் சொல்லப்பட்ட தர்மங்கள் முக்காலத்திற்கும் அதாவது பூதவர்த்தமான பவிஷயத் சம்பவங்களுக்கும் ஒத்தனவாய் விளங்குகின்றன.

(7) இந்த ஆரியமதமானது சிருஷ்டிகாலம் முதற்கொண்டேயுள்ள புராதனமானது. அந்த மதத்தையே ஆதாரமாய்க்கொண்ட உங்களது நாகரிகமானது இன்று நேற்று வந்ததல்ல. உங்களது வேதத்தை நீங்கள் நம்பும்பக்ஷத்தில் உங்களுடைய மதமும், நாகரிகமும் மனுஷ்யனால் உண்டாக்கப் பட்டவையல்லவென்று உணர்வீர்கள்.

(8) ஆகையினால் என்ன முயற்சிசெய்தாலும் அவைகள் மனுஷ்யனால் அழிக்கப்படக் கூடியவையல்ல. எந்த தேசத்திய சரித்திரமும் உங்களது நாகரிககாலத்திற்குப் பூர்வமானதல்ல என்பதை நீங்கள் மறந்துபோகக்கூடாது.

(9) நீங்கள் பக்ஷபாதமில்லாமல் யோஜித்துப் பார்க்கும் பக்ஷத்தில் உங்களுடையதல்லாத மற்ற அன்னியமதங்களும், நாகரிகங்களும் வெகுகாலத்திற்குப் பிறகு உண்டானவைகளென்பதும், குற்றம் குறை சேர்ந்தவைகள் என்பதும், உங்களுடையதை மாதிரியாகப் பார்த்து நூதனமாய் மனுஷ்யப் பிரயத்தனத்தால் உண்டாக்கிக் கொள்ளப்பட்டவைகளென்பதும் அவைகள் அனுபோகத்திற்குப் பொருந்தாதனவென்பதும், தோன்றும்போதெல்லாம் அவரவர்களுக்குத் தோன்றினபடி அடிக்கடி மாற்றிக் கொள்ளக் கூடியவைகளென்பதும் உங்களுக்குப் புலப்படும்.

(10) உங்களுடைய தெய்விகமான சநாதநமதத்தையும் அதை ஆதாவாயுடையதார்மிக நாகரிகத்தையும் உங்களுடைய இஷ்டப்பிரகாரமெல்லாம் வேடிக்கைபோல மாற்றிக்கொள்ள உங்களுக்கு சுதந்தரமில்லை. நீங்கள் அவைகளில் பிரவேசித்து மாற்றவும் கூடாது; முடியாது. அப்படிமாற்ற முயற்சிசெய்ய விரும்புவோர்கள் தங்களை அவைகளினின்றும் விலக்கிக் கொண்டவர்களாய் ஆவார்கள்.

(11) உங்களுடைய வைதிக சாஸ்த்ரீயமதமானது உங்களை நன்மார்க்கத்தில் நடத்திவைப்பதாயும் இன்னவிதம் நீங்கள் நடக்கவேண்டுமென்பதை விதிப்பதாயுமிருக்கின்றது. நீங்கள் அதை உங்களிஷ்டத்திற்குத் தக்கப்படி செய்துகொள்ளவோ அல்லது வேறு எவ்விதத்திலாவது பிரவேசித்து மாற்றிக்கொள்ளவோ

அதிகாரிகளல்ல. நீங்கள் வேண்டுமென்றால் அதைவிட்டு உங்களை விலக்கிக் கொள்ளலாமேயொழிய வேறுவழியில்லை. அப்படி விலக்கிக் கொண்டவர்கள் அதினால்வரும் பலனை அனுபவிக்க வேண்டிவரும்.

(12) அப்படிச் சிலர் தங்களை விலக்கிக்கொண்டு விட்டார்கள். இன்னும் சிலர் விலக்கிக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார்கள் இன்னும் சிலர் விலக்கிக்கொள்வதாய் பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அப்படி ஆயத்தமாயிருக்கிறபேர்களை நெருங்கி அவர்கள் ஆபாசப்பட்டாலும் பாராட்டாமல் இப்படி அநியாயமாய் நல்லவழியிலிருந்துநழுவுவதாலுண்டாகும்நஷ்டம் இன்னதென்று அடிக்கடிஅவர்கட்கு வற்புறுத்துவதும் அப்படிஹிந்துதர்மத்தைக் கைவிடாமலிருப்பதாலுண்டாகும் லாபம் இவ்வளவு என்று அடிக்கடிஎடுத்துரைப்பதும் ஒவ்வொருஉண்மையான ஹிந்துவும் ஆயுள்வரைக்கும் கைப்பிடிக்க வேண்டிய கடமையாகும்.

(13) நம்முடைய கம்பீரமான மதத்தின் குணங்களை முழுதும் நான் எடுத்துரைக்க இப்போது தொடங்கவில்லை. பெரிய ஆரியமதத்தின் விஸ்தாரமான விஷயங்கள் படித்துணர்ந்த ஹிந்து வித்வான்களாகிய உங்களுக்குத்தெரிந்தேயிருக்கும். ஆகிலும் சில முக்கிய அம்சங்களைமட்டும் நான் இப்போது விவரிக்கிறேன். உங்களது ஸநாதன தர்மமானது எல்லாருக்கும் பொருந்தி எக்காலத்திலுமுள்ள சாச்வதமானதால் இந்தமதம் ஒன்றே மனுஷ்யஜன்மத்தின் வாழ்வு மரணம் இவைகளின் உண்மையான கருத்தை உலகத்தோர்யாவரும் அறிந்துகொள்ளும்படி செய்யும் அருமையானமதமாகும். இந்தக்கருத்து இன்னதென்பதைப் பிரத்யேகமாய் விஸ்தரித்து உங்களுக்கு வேறொரு சமயத்தில் எடுத்துரைப்பதாயிருக்கிறேன்.

(14) ஆகையினால் வல்லமையுள்ள பூர்வீகபிர்ம்மரிஷி பரம்பரையைச் சேர்ந்தவர்களாயும், வேதத்தைக் காப்பாற்றிவைத்துக்கொண்டு வருபவர்களாயுமிருக்கும் பிராமணர்களாகிய உங்களுக்கே வேதசாஸ்திரமாகிய தீபத்தால் சகல ஜீவன்களுக்கும் ஆத்மஞானத்தை விளங்கச்செய்து அவர்களை மோக்ஷசாம்பி

ராஜ்யபத்தை அடையச்செய்யும் சிரேஷ்டமான கடமை ஏற்பட்டிருக்கிறது.

(15) உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும்ஆத்மார்த்தத்தை பற்றிய உன்னதமான பொறுப்பு இப்பேர்ப்பட்டதென்பதை நன்ருய் உணர்வீர்களாக. அதைவிட்டுக் கேவலம் மிருகதர்மத்திற்கு நீங்கள் உங்களைத் தாழ்த்திக்கொள்ளாதீர்கள். ஆத்மார்த்தம்ஒழுங்காய்க் கைகூடிற்ருனல் மனுஷ்ய க்ஷேமத்திற்கேற்பட்ட இதர சுகங்களெல்லாம் தனக்குத்தானே கைகூடிவரும்.

(16) அறியாமையாலாவது குரோதத்தினுலாவது யார் என்ன எண்ணினுலும் எண்ணட்டும். உலகத்தோருக்கு க்ஷேமமுண்டாக்கும் வேதக்ஞானத்தை அடைவிப்பது பிராமணர்களாகிய உங்களாலேயே ஆகவேண்டியகாரியமென்று அறிவீர்களாக. பிராம்மண்யத்தைக் காப்பாற்றும் விஷயத்தில் பிராமணர்களாகிய உங்களுக்கு இப்போது நல்லசமயம் நேர்ந்திருப்பதாய்ச் சொல்லலாம். ஆனுலும் உங்களுடைய ஸ்வயநலத்தை உத்தேசித்தே அப்படிச் சொல்லலாமேயொழிய மானிடகுலத்தின்மீது இரக்க சம்பந்தமாய் அப்படிச்சொல்லக்கூடாது. உங்களுக்கு இது நல்ல சமயமென்பது எப்படியெனில் மற்றவர்களின் தர்மநலத்தையும், அபிவிருத்தியையும் பொறுத்து நீங்கள் பொறுப்புடன் ஆலோசனைகள் செய்யுங்கடமையானது உங்களுடைய சொந்ததர்மானுஷ்டான மார்க்கத்திற்கு இடைஞ்சலாய் நிற்கவில்லை. ஏனென்ருல் மேற்சொன்ன மற்றவர்கள் முக்கியமாய் இத்தேசத்தின் தென் பாகத்திலுள்ளவர்களில் அநேகர் நீங்கள் அவர்கள்பொருட்டு தலையிட்டு உதவிசெய்வதை அவர்கள் அபேக்ஷிக்கவில்லை. பிராமணரல்லாத ஹிந்துக்களுடைய கிரககிருத்திய சம்பந்தமான மதச் சடங்குகளில் அதிலும் முக்கியமாய் அவர்களில் இறந்துபோன பந்துக்களில் மறு ஜன்ம க்ஷேமத்திற்காக நீங்கள் தொல்லையுடன் நடத்திவைக்கவேண்டிய கஷ்டமான கடமையின் சுமையை உங்களிடமிருந்து பிராமணரல்லாத ஹிந்துக்கள் சன்னம் சன்னமாய் இரக்கிவருகிருர்கள். ஜீவன்போன பிறகு அவர்களுடைய அப்படிப்பட்ட நிர்ப்பாக்கிய பந்துக்கள் அடையும்

கதியைப்பற்றி என்னவானுலும் போகட்டும். சாஸ்திரம் அறிந்தவர்களுக்கு அவர்கள் கதி எப்படியாகுமென்பதில் சந்தேகமில்லை. இது தெரிந்த ஒவ்வொரு உண்மையான ஹிந்துவும் மிகவும் விசனமாய் உணராமலிரான். இப்படியெல்லாம் இருந்தும் மீதியிருக்கும் ஒவ்வொரு பிராமணரல்லாத ஹிந்துவும் தர்ம நடவடிக்கைகளில்தான் மாறுதல் செய்து விட்டதின் அதாவது மீறிவிட்டதின் பலன்களைப் பற்றி தான் முழுதிருப்தியாய் உணருகிறதாய்ப் பாசாங்கு மட்டும் செய்துவருகிறுன். அவன் உங்களுடையபுரோஹிதர்கள், பஞ்சாங்கக்காரர்களில்அனேகரிடத்தில் அவர்களுக்கு மரியாதை காட்ட அல்லது மெச்சத்தகுந்த யோக்கியதாம்சம் ஒன்றுமில்லையென்று எண்ணியிருக்கிறதுமல்லாமல், மரித்த ஜீவன்களை மறு லோகத்தில் நற்கதியடைவிக்கும் பொருட்டுச் சுத்தமான பிராமணரல்லாத ஒரு பக்தபரதேசிக்குச் சடங்குக்குக் கொடுக்கும் தானபதார்த்தங்களைக் கொடுத்துவிடுவது நியாயமான செய்கைபோல் நினைத்துக்கொண்டுமிருக்கிறுன். தான் அப்படி நினைத்துக்கொண்டிருப்பதற்கு ஆதாரம் ஏதாவது இருக்கிறதா இல்லையாஎன்ற விஷயத்தில்மட்டும் அவன் புத்தியை செலுத்தவில்லை. இப்பேர்ப்பட்ட விஷயங்கள் தன்னுடைய இஷ்டத்தைப் பொறுத்தவையல்ல. இந்த உலகத்தைத்தவிர வேறே உலகங்கள் இருக்கின்றனவென்பதை எந்த சாஸ்திரங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனவோ அந்தசாஸ்திரங்கள்மட்டுமே அப்படிப்பட்ட உலகங்களுக்கு இங்கிருந்து போகிறவர்களுக்கு உதவி செய்ய இங்கிருக்கும் மனிதன் கைக்கொள்ளவேண்டிய சரியான வழிகளும், சாதனங்களும் இன்னின்னவைகளென்று அதிகாரத்துடன் விதிக்கக்கூடும். சாஸ்திரமானது அப்பேர்ப்பட்ட விஷயங்களுக்குச் சில குறிப்பான நிபந்தனைகளை விதித்திருக்கின்றது. அவைகளில் முக்கியமானது அக்னியில் ஆகுதிசெய்வதினுல் என்பதுவேயாகும். அக்னிக்கு அபிமானதேவதையாகிய அக்னிதேவன் யாருக்குஉத்தேசிக்கப்பட்டதோ அவனிடத்தில்தகுந்தரூபத்தோடு அந்த ஆகுதியைக்கொண்டுபோய்ச் சேர்ப்பான். பரிசுத்தமான நெருப்பானது த்விஜனுக்கு எப்படி அக்னியோ அப்படிப் போலவே சூத்திரனுக்கு அக்னியானது பிராமணன் வலதுகையே

ஆகுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதுபற்றியே சூத்திரன் வேதப்பிரகாரம் நேராய் அக்னியில் ஆகுதிசெய்யக்கூடாது. ஆகுதிசெய்வதானது எற்ற வேதமந்திர உச்சாரணையோடுகூடச் செய்யவேண்டியதாயிருக்கிறது. அப்படிப்பட்ட வேதமந்திர உச்சாரணம் த்விஜனுக்குமாத்திரமே உரியது.

---

## 8 பிரகரணம்.

## வேதமோதும் கடமைவாய்ந்த வேதியர்கள் தமது தொழிலை மாறின காரணங்கள்.

ஒரு நல்ல பக்தனான சூத்திரன் அல்லது மற்ற பிராமணரல்லாதானுடைய கை (அது நன்றாய் அலம்பின சுத்தமான கையாயிருந்தாலுங்கூட) அக்னிக்குப் பதிலாகுமென்று எந்த சாஸ்திரத்திலும் சொல்லப்பட்டிருக்கவில்லை. நான் சென்னப்பட்டினத்திலிருக்கும் ஒருசிநேகிதனுக்கு ஒருடெலக்ராம் மணியார்டர் அனுப்ப வேண்டுமானால் போஸ்டாபீஸ் விதிகளின்படி ஒரு பாரத்தை எழுதி போஸ்டாபீஸிலுள்ள ஏற்பட்ட டெலிக்ராம் கிளார்க்கினிடம் அந்த பாரத்தையும் பணத்தையும் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஒரு போஸ்டாபீஸ் அருவருப்பான ஜாகாவில் கட்டப்பட்டிருப்பதாயும், அந்த மணியார்டர் கிளார்க்கு அஸங்கியமாயும் பார்வைக்கு அவலக்ஷணமாயும் சிடுமூஞ்சியாயும் பண ஆசைமிகுந்தவனாயுமிருப்பதாய் வைத்துக்கொள்வோம். நான் அதினாலே டெலக்ராம் மணியார்டரைச் சரியான பாரத்தில் எழுதாமலும் துர்க்கந்தம் வீசும் போஸ்டாபீஸ் ஜாகாவை வெறுத்தும், அஸங்கியமான கிளார்க்கினிடத்திற் போகாமல் கோபித்துக்கொண்டும் நேராய் அழகாய்ப் பூந்தோட்டவசதியடைந்த உப்பரிகைகள் அமைந்த ஒரு டிஸ்டிரிக்ஜட்ஜியினுடைய பங்களாவிற்குத் தடதடவென்றுபோய் அங்கே லக்ஷணமாய் வைக்கப்பட்டுக் காணப்படும் ஒருபெட்டியில் பணத்தைப் போட்டுவிட்டுச் சென்னப்பட்டினத்திலிருக்கும் சிநேகிதன் கைக்கு நிச்சயமாய் பணம் சேர்ந்துவிடுமென்று திருப்தியாயிருந்தால் எப்படியோ, அப்படிப்போல வேதான் மேற்கண்டவர்களின் புதுமாறுதலான ஏற்பாடுகள் என்

னலாம். பிராமணரல்லாத ஹிந்துக்களுக்குள் தப்பபிப்பிராயம் கொண்டிருக்கும் நம்முடைய சிநேகிதர்களில் அநேகருடைய யோஜனையில்லாத நடவடிக்கையையும் தார்மிகவிஷயத்தில் கேடான செய்கையையும் வரவர அதிக மூர்க்கமான நிலைமையையும் கண்டு நாம் இரக்கப்படவேண்டியிருக்கிறது. ஆகையால் பிராமணர்களாகிய நாம் பிரதிதினமும் செய்யும் நித்யகர்மாவோடுகூட ஒரு முக்கியகடமையாகச் செய்யவேண்டியிருப்பது என்னவெனில் சீக்கிரத்தில் நம்முடைய சிநேகிதர்களுக்கு நல்லபுத்தியையும் சரியானநிலைமையையும் கொடுத்து அவர்களை ஆரியதர்மமார்க்கத்திற்கு மறுபடியும் கைதூக்கிவிடும்படி கிருபைசெய்ய வேண்டுமென்று நாம்ஒவ்வொருவரும் ஈச்வரனைப்பிரார்த்திப்பதுவேதான்.

(1) வேதத்தை ஒருவர் நம்புவதாயிருந்தால் அந்த வேதத்தில் என்னென்ன சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவைகளை நம்பித்தானாகவேண்டுமல்லவா? வேதஞானத்தை மற்றவர்களுக்குப் போதிக்கும் கடமை பிராமணர்களுக்கு உரித்தானதென்று அந்த வேதத்திலேயே விபக்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படிக்கு ஏற்பட்டகாரணம் என்னவெனில் பிராமணர்களாகிய நீங்கள் உங்கள் பிரவரத்தாலும் கோத்திரத்தினாலும் தெரியவருகிறபடி வேதத்தை ஆதியில் காப்பாற்றிவைத்திருந்த மஹாத்மாக்களான ரிஷிகளில் ஒரு ரிஷியினுடைய வம்சத்திலிருந்து நேரே உற்பத்தியாய்த் தொடர்ந்து வந்திருப்பதினாலும், வேத ஸம்ஸ்காரத்தினால் சுத்தம் செய்யப்பட்டதாயின் கர்ப்பத்தில் புகுந்த காலம்முதல் அப்போதைக்கப்போது தேக சுத்தியையும் மனச் சுத்தியையும் உத்தேசித்து நீங்கள் செய்துகொண்டு வந்திருக்கும் வேதஸம்ஸ்காரங்களால் நீங்கள் சுத்தப்பட்டிருப்பதினாலும்தான்.

(2) இப்படியிருக்க சுதந்தரமான மனதும் கட்டுப்படாத செய்கையும் பெரிதென்றெண்ணிக்கொண்டிருக்கும் இந்த விபரீத காலத்தில் அருகனல்லாத ஒருவன் நியாயத்தையும் புராதன ஆசாரணையையும் திரஸ்காரம் செய்து வேதத்தைத்தான் படித்துப் போதிப்பேன். அத்யயனம் செய்வேனென்று வீம்பாய் முன் வரலாம். ஆனால் அப்படித்தானும் அருகனில்லாதிருந்து வம்ச பரம்பரை பாத்தியமுமில்லாதிருக்கும் ஒருவன் வேதம் சொல்லு

வதில் அதிக்ரமிப்பனேயானல் அவனல் சொல்லப்படும் வேதமும் வேதமல்ல. அந்த வேதத்தின் உண்மையான சக்தியும் சிதறிப் போகும்.

(3) அதிகாரமில்லாத ஒருவன் எவ்வளவு புத்தியிருந்தாலும் படித்திருந்தாலும் வேதத்தை உச்சரிக்கவும் பிறருக்கு அர்த்தம் சொல்லவும் அருகனல்லன் என்றும், அப்படிச் சொல்லும் வேதம் வேதமாகாதென்றும் நிச்சயமாய்ச் சொல்லலாம். நியாயக்கோர்ட்டிலுள்ள ஒரு வக்கீல் எவ்வளவு புத்திசாலித்தனத்தோடானலும் எவ்வளவு நடுநிலைமைபொருந்திய எண்ணத்துடனுனலும் ஒரு தீர்மானத்தை ஸ்திரப்படுத்திப் பேசினலுங்கூட அது கோர்ட்டாருடைய தீர்ப்பாகுமா? மந்தபுத்தியமைந்தவனுயிருந்தாலும்கூட நியாயாதிபதியின் ஸ்தானத்திற்கென்று நியமிக்கப்பட்ட ஒரு ஜட்ஜியினுடைய வாக்குமூலமாய் உண்டாகிற தீர்மானமல்லவோ ஜட்ஜ்மெண்டென்று எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டு லாப்படி அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.

(4) அதுவுமன்றித்தகுந்த யோக்கியதை யுள்ளவர் வேதம் சொல்லும்பக்ஷத்தில் அது சொல்பவருக்கும் கேட்பவர்களுக்கும் நன்மையைப் பயக்கும் சக்திவாய்ந்ததென்றும், தகாதவன் வேதம் சொல்வதினல் தீமைபயக்குவதுமன்றிச் சொல்பவனுக்கும் கேடுண்டாகுமென்றும் நீங்கள் அறிவீர்களாக. இப்படி வேதம் சொல்லத்தகாதவர்களென்று சிலரை விலக்கும் விதரணையானது எவ்விதமான த்வேஷத்தினலுமல்ல. எல்லாருடைய நன்மையையும், க்ஷேமத்தையும் உத்தேசித்து வேதத்தின் சிரேஷ்டத்தை ஒருவருக்கும் தீங்கில்லாமலும் சகலருக்கும்நன்மை செய்யுமாறும் காப்பாற்றி வைக்கும் எண்ணத்தோடு ஏற்படுத்தப்பட்ட விதரணையேயாகும்.

(5) வேதத்தைச் சொல்லுவதானது பிராமணர்களுக்குள்ளும் எல்லாருக்கும் விதிக்கப்படவில்லை. எல்லாச் சமயத்திலும் சொல்லத்தகுந்ததுமல்ல. எப்படியெனில் வேதத்தை பிராமண ஸ்திரீகள்கூட அத்யயனம் செய்யக்கூடாது. பிராமணர்களாயினும் தீண்டல் அசூசியோடிருக்கும்போது அவர்களுக்கும் வேதத்தைச்சொல்ல அதிகாரமில்லை.

(6) வேதத்திற்கு ஆதாரமாகிய வேதபுருஷனுடைய கட்டளையே அப்படி ஏற்பட்டிருக்கிறது. வேதத்தைச் சொல்ல யார் அருகரென்றும் யார் அருகரில்லையென்றும் தீர்மானிக்கும் அதிகாரம் நம்முடையதல்ல. அந்த வேதபுருஷன் சொல்லியிருக்கும் ஆக்ஞையே நமக்குப் பிரமாணமாகும். ஆகையால் வேதார்த்தத்தின் உண்மையைப் பிறருக்குப் போதிக்கும் சுதந்தரமானது வேதத்தைப் பாதுகாக்கும் கடமையை வகித்த பிராமணர்களாகிய உங்களுடையதேயாகும். ஆனால் அப்படி வேதத்தைப் பிறருக்கு எடுத்துரைக்கப் போதுமான வ்யுத்பத்தியும் அனுஷ்டான ஆசாரணையும் சுத்தமும் உங்களுக்கு இப்போது இருந்தாலல்லாது வேதத்தைப்பிறருக்குப் போதிப்பது அசாத்தியமாகும். நாளடைவில் உங்களாலும் முழுதும் விலக்கமுடியாத அனேகக் காரணங்களால் நீங்கள் இப்போது இருக்கப்பட்ட நிலைமை நிர்வாகசக்தி இல்லாமையால் மிகவும் தாழ்ந்துபோயிருக்கிறது. இனி நீங்கள் ஆத்மார்த்த போதனைக்கு அருகராகும்படியான பழைய ஸ்திதிக்கு எப்படி ஏறப்போகிறீர்களென்ற ஏக்கம் மனதில் உண்டாயிருக்கிறது. உங்களது நிலைமை தாழ்ந்துபோயிருப்பதற்குப் பல காரணங்களுண்டு.

(7) இப்போது நடந்துவரும் ராஜரீகத்தில் உங்களுடைய மனநோக்கத்தினுடைய போக்கே மிகவும் மாறியிருக்கின்றது. உங்களுடைய காலமெல்லாம் பதார்த்த சௌகரியங்களைத் தேடிக்கொள்வதிலேயே முழுதும் வீணாய்க் கழிந்துகொண்டிருக்கிறது. அந்தப்படி தேடிக்கொள்ளும் சௌகரியங்களிற்கூட சில அவசியமானதும் அனேகம் அனாவசியமானதுமாயிருப்பதுமன்றி அவைகளைத் தேடிக்கொள்ளும் முயற்சியில் நீங்கள் உங்களுடைய சகோதரர்களாகிய வைச்ய சூத்திரர்களோடு போட்டிபோடும் நிலைமைக்கு உட்படுத்திக்கொண்டுமிருக்கிறீர்கள். ஆகவே கவர்ன்மெண்ட் ஸர்விஸிலும், இதர ஸர்விஸிலும் பணம் சம்பாதிக்கும் உத்தியோக ஸ்தானங்களைப் பிராமணர்களாகிய நீங்களே பெரும்பாலும் கைப்பற்றிக்கொண்டிருக்கிறீர்களென்று ஓர் அபவாதம் எங்கும் கிளம்பியிருக்கிறது.

(8) இப்படி உங்களைக் குற்றம் சாட்டுவோர்கள் வேளாண்மை, வர்த்தகம், வியாபாரம், கைத்தொழில் முதலிய துறைகளில் அதிகப் பொருள் சம்பாதிக்கும் லாபகரமான வேலைகளையெல்லாம் தாங்களே ஆக்ரமித்து அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்ற வாஸ்தவத்தை எண்ணிப்பார்க்க மறந்துபோயிருக்கிறார்கள் என்பதை நீங்கள் நன்றாய்க் கவனியுங்கள்.

(9) க்ஷத்திரிய ஜாதியரே இப்போது எங்கும் காணப்படவில்லை. வடக்கே சில க்ஷத்திரியர்கள் இருந்தாலும் அவர்களின் ஸங்கியை மிகவும் குறைவேயாகும். க்ஷத்திரியர்கள் துர்லபமாய்ப் போகவே இந்திய ராஜசக்கிரவர்த்தி அவர்களால் நடத்தப்பட வேண்டிய ராஜரீகமான நியாயசபைகளிலும் பலவித உத்யோக ஸ்தானங்களிலும் தலைமைவாய்ந்த நீங்கள் தலையிட்டுக்கொள்ளும்படி நேர்ந்துவிட்டது. அந்தவேலைகளெல்லாம் க்ஷத்திரியர் கடமையாயிருந்தனஎன்பதுஉண்மையே. க்ஷத்திரியரில்லாது போனநிலும் காலத்தையனுசரித்துக் காலக்ஷேபம் செய்யவேண்டிய கொடுமையினால் நிர்ப்பந்திக்கப் பட்டதாலும் நீங்கள் உங்களது பிரதானவைதீக தர்மத்திற்கு இடைஞ்சலாயிருப்பினும் அதைப் பாராட்டாமல் உலகத்தின் நன்மையைக்கருதிப் பலவிதமான உத்யோகங்களில் நுழைந்து கொண்டிருக்கிறீர்கள்.

(10) அப்படி நடந்திருப்பது கிரமமேயல்லவா. எப்போது க்ஷத்திரிய ராஜாக்களால் நியமிக்கப்படவேண்டிய ஸ்தானங்கள் காலியாயிற்றோ அப்போதே அவைகளை நிரப்பத்தகுதியுள்ள வகுப்பினரைத் தெரிந்து எடுக்கவேணுமேயல்லது தகுதிக்குறைவானவர்களை அந்த ஸ்தானங்களில் அமர்த்தல் உசிதமாகுமா? அப்படிச் சரியானவர்களை அமர்த்தாவிடில் ராஜரீகம் ஒழுங்காய் எப்படி நடைபெறும்? பிராமணரல்லாதவர்கள் இக்காலத்தில் கொண்டு வந்திருக்கும் புகாரானது நியாயமானதா? சற்றுயோஜியுங்கள். அவர்களை மேற்படி உத்யோகங்களுக்குத் தகுதியாய்ப் போட்டிபோடக் கூடாதென்று யாராவது தடுத்தார்களா? அப்படித்தகுதிக் குறைவிருந்தால் அதைச்சரிப்படுத்திக் கொள்ள வித்யாபிவிர்த்தி செய்யும் பிரயத்தனத்தை அவர்கள் ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது? அது விஷயத்தில் வேண்டிய உதவியை

அவர்களுக்கு நீங்களும் செய்ய வேண்டியதுதான். அதைவிட்டு அவர்கள் புகார்செய்ய என்னநியாயமிருக்கின்றது? மதராஸ் யுனிவெர்ஸிடி அதிகாரிகள் பரீக்ஷையில் பிராமணர்களை ஏராளமாய்ப் பியாஸ்செய்து வைப்பதுகூடப் பக்ஷபாதத்தினாலும் அக்ரமத்தினாலுமென்று பிராமணர்களல்லாதவர்கள் அந்த அதிகாரிகள்பேரிலும் குற்றம் கூறுகிறார்களோ என்னவோ தெரியவில்லை.

சென்னை ராஜதானியில் 1919௵ வரையில்
பெரிய பரிக்ஷைகளில் தேறினவர்களின் சங்கியைக்கு ஜாப்தா.

| பரிக்ஷையின் பெயர். | தேறின எல்லா ஜாதியாரின் மொத்தம் | தேறின ஹிந்துக்கள் மட்டும்மொத்தம் | அந்த ஹிந்துக்களில் தேறின பிராமணர்களின் சங்கியை | அதில்தேறின பிராமணரல்லாதஹிந்துக்களின் சங்கியை |
|---|---|---|---|---|
| பழைய B. A. | 12841 | 11360 | 8778 | 2582 |
| புது B. A. | 3310 | 2870 | 1943 | 927 |
| M. A. | 618 | 555 | 477 | 78 |
| L. T. | 1756 | 1380 | 1195 | 185 |
| B. L. | 4065 | 3830 | 2980 | 850 |
| S.S.L.C. | 2305 | 2130 | 1570 | 560 |
| M. L. | 69 | 67 | 58 | 9 |
| L. M. S. | 485 | 330 | 173 | 157 |
| B. M. S. | 212 | 147 | 87 | 60 |
| M. D. | 14 | 7 | 6 | 1 |
| B Science | 7 | 7 | 6 | 1 |
| B. C. E. | 183 | 157 | 139 | 18 |
| B. A. Hon | 585 | 519 | 393 | 126 |
| கூடுதல் | 24070 | 21232 | 16235 | 4997 |

ஸென்ஸஸ் கணக்குப்படி இந்தராஜதானியில் $6\frac{1}{2}$ லக்ஷம் பிராமண ஆண்களும் $176\frac{5}{8}$ லக்ஷம் பிராமணரல்லாத ஹிந்து ஆண்

களுமிருக்கிறார்கள். அதாவது, பிராமண ஆண் சங்கியையைக்காட்டிலும் இதர ஹிந்து ஆண்கள் 27 மடங்கு அதிகமிருக்கிறார்கள். இந்த ஜனத்தொகைத் தாமாஷாப்படி பார்த்தால் மேற்கண்டபடி 21232 தேறின ஹிந்துக்களில் 766 பிராமணர்களாயும் 20468 பிராமணரல்லாத ஹிந்துக்களாயும் இருக்கவேண்டியதற்குப் பதிலாக 16235 பிராமணர்களும் 4997 பிராமணரல்லாத பேர்களுமல்லவோ தேறி இருக்கிறார்கள். ஜனத்தொகைக்குச் சரியாய்த் தேறினவர்களை நிரவவேண்டுமானால் தேறின பிராமணர்களில் 15471 பேர்களைத் துரத்திவிட்டு அவர்களுக்குப் பதில் 15471 இதர ஹிந்துக்களைத் தேறவைக்கவேண்டும். அப்படிச் செய்வதானது பரிக்ஷகளிலும், கலாசாலைகளிலும் பிராமணர்களை நுழையவிடக் கூடாதென்று பீனல் சட்டம்செய்து தடுத்தாலொழிய எப்படிச்சாயும்? தற்காலம் வேலைகளிலுள்ள 159 ஹிந்து டி. கலெக்டர்களில் 112 பேர் பிராமணர்களாயும், 214 ஹிந்து தாசில்தார்களில் 142 பேர் பிராமணர்களாயும், 281 ஹிந்து டிப்டி தாசில்தார்களில் 213 பேர் பிராமணர்களாயும் இருக்கிறார்கள். இன்னும் மற்ற டிபார்டுமெண்டுகளிலும் இவ்விதமே பெரும்பாலோர் பிராமணர்களாகவே இருக்கிறார்கள். பிராமணரல்லாத ஹிந்து உத்தியோகஸ்தர்களின் சங்கியை எவ்வளவோ அதில் 27ல் ஒரு பங்குமாத்திரம் பிராமண உத்தியோகஸ்தர்களிருக்கும்படி வைத்துக்கொண்டு மீதி பிராமண உத்தியோகஸ்தர்களைத் துரத்திவிட்டு அவர்களுக்குப் பதிலாய் வேலையைச் சரியாய்ப் பார்க்கும் சாமர்த்தியமுள்ள பிராமணரல்லாத ஹிந்துக்கள் அகப்படுவார்களா என்று தேடினாலும் அகப்படவழியில்லை. 10000 பிராமணர்களில் 175 பேர்கள் படித்துப் பெரிய பரிக்ஷகள் தேறிவர, பிராமணரல்லாத ஹிந்துக்கள் 10000 பேருக்கு $2\frac{3}{4}$ பேர்கள்மட்டும் அப்படிப் படித்துத் தேறும்படி இருப்பானேன்? அவர்களும் விஸ்தாரமாய்த் தேறும்படி கலாசாலைகளில் சேர்ந்து படிக்கும்படி முன்வருவதை யார் தடுத்தார்கள்? தங்களது நிறைந்த நிலபுலன்களையும், செல்வங்களையும் பாதுகாக்கவேண்டி பிராமணரல்லாதவர்கள் விலகியிருந்தால் அதற்கு ஏழைப் பிராமணர்களா ஜவாப்தாரிகளாவது?

## 9 பிரகரணம்.

## பிராமணரல்லாதாருக்கும் பிராமணர்களுக்கும் சொல்லும் முக்கிய வார்த்தைகள்.

1. பிராமணர் அல்லாதவர்களே ஏராளமாய் கலாசாலைகளில் சேர்ந்து படிக்கும் விஷயத்தில் நீங்கள் ஏன் முயற்சிசெய்யக்கூடாது? அப்படி ஏராளமாய்ப்படிக்க நீங்கள் முயற்சி செய்து உத்யோகஸ்தானங்களைக் கைப்பற்றிக் கொள்ளும்பக்ஷத்தில் அதைத்தான் பிராம்மண்யத்தை முன்னுக்குக் கொண்டுவரும் க்ஷேமகாலமென்பதாய் நான் நினைக்கிறேன். அப்படி நீங்கள் செய்யாமலிருப்பதற்குக் காரணம் எல்லாம் கூடி அதிக கஷ்டப்பட்டுப் படித்து பரீக்ஷைகொடுத்து உத்யோகத்தைச் சம்பாதிப்பதால் அடையும் பலனை விட இப்போது நீங்கள் கைப்பற்றி கொண்டிருக்கும் வியாபாரம், கைத்தொழில் முதலிய வேலைகளினால் லாபம் சம்பாதிப்பதானது அதிகம். சுளுவாயும் நிச்சயமாயும் அடிமை உணர்ச்சியில்லாததாயுமிருப்பதினாலேயே யென்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. பரீக்ஷைவேண்டியிராத மற்ற உத்யோகங்களுக்காவது வேலைகளுக்காவது நீங்கள் ஏன் முன்னிட்டு வரக்கூடாது. சில நாளைக்குமுந்தி இந்தியன் டிபென்ஸ் போர்ஸுக்கு எல்லாரும் சேரலாமென்று கவர்ன்மெண்டார் எல்லாரையும் வருந்தியழைத்தார்களே.

2. கனம் ஸர். பி. சிவஸ்வாமிய்யர் சொல்லியிருக்கிறபடி இந்த சென்னைராஜதானியில் டிபென்ஸ்போர்ஸில் சேரச்சம்மதித்து வந்த 1047 அப்ளிகேஷன் செய்தவர்களுக்குள் 550-க்கு மேல் பிராமணர்களென்றும், மற்ற 497-பேர்கள் பிராமணரல்லாத ஹிந்துக்கள், கிருஸ்துவர்கள், மகம்மதியர்கள் முதலிய யாவத் வகுப்பினர்களென்றும் தெரியவருகிறதே.

3. இவ்விதமாகவே திருச்சினாப்பள்ளியில் யுத்தப் பயிற்சி கற்றுக்கொள்ளவந்தபடி டிபென்ஸ் சேனையின் முதல் பாட்ச்சு 244-பேர்களில் 125-பேர் பிராமணர்களென்றும், மீதி 119-பேர் தான். மற்ற எல்லா ஜாதியார்களும் சேர்ந்த மொத்தமென்றும்

தெரியவருகிறதே. கவர்ன்மெண்டார் பொதுவாய் எல்லா ஜாதி யாரையும் வருந்தி அழைத்திருக்க, கூட்டம்கூடிச் சபைகளில் பேசும் பிராமணரல்லாதார்கள் யுத்தச்சேனை விஷயத்தில் தனது ஜனத்தொகைக்குத் தக்கபடி ஏன் ஏராளமாய் முன்வந்து சேரக் கூடாது. அவர்களல்லவோ தேகபுஷ்டி, சாப்பாடு சௌகரியம் முதலிய விஷயங்களில் மிலிட்டெரிச் சேனைக்குப் பிராமணர்களை விட அதிகத்தகுதியுடையவர்கள். ஏன் அவர்கள் கிட்டி வந்த சமயத்தைக் கைவிடவேண்டும்.

4. இவைகளைக் கவனித்தால் ராஜாங்கபரிபாலனத்தில் க்ஷத்திரியர்களில்லாமையால் காலியாயிருக்கும் ஸ்தானங்களுக்கு பிராமணர்களே தங்களது நிலைமையிலிருந்து கீழிறங்கி வேலையை ஒப்புக்கொள்ளத் தகுதியுடையவர்களா யிருந்தார்களென்பது வியக்தமாகிறது. மேற்படி ஸ்தானங்களுக்கு வைச்யர்களாவது சூத்திரர்களாவது கீழிருந்து மேலேறுவது அவ்வளவு சாத்திய மான காரியமில்லையென்பது வியக்தமாகிறது.

5. ஆனால் ஹிந்துமதத்தினுடைய அனுகூலத்தை போ ஜிக்கும் விஷயத்தில் பிராமணர்கள் யுத்தச்சேனையில் சேருவதா னது பிராம்மண்யத்திற்குக் குறைவு என்பதற்குச் சந்தேகமில்லை. ஸீவில் ஸர்விஸில் சேருவதாவது அவ்வளவுகுறைவையுண்டாக்க மாட்டாது.

6. ஆகையினுல்தான் பப்ளிக்ஸீவில் ஸர்விஸ் வேலையில் பிராமணர்கள் விஸ்தாரமாய்ச் சேர்ந்திருக்கிறுர்கள். மேலும் வெகுகாலமாய் உபதேசம்செய்யும் தொழிலிலும், ஹிந்துராஜாக் களிடத்திலும், மற்ற முகம்மதிய ராஜாக்களிடத்திலும், ஆலோ ஜனைசொல்லும் மந்திரிஸ்தான வேலையிலும் அனுபோகமுள்ள பிராமணர்கள் B.A, L.T. பாஸ்செய்து எஜுகேஷன் டிபார்ட் மெண்டு காலேஜ் ஸ்கூல் உபாத்தியாயவேலைகளிலும், BA, BL. பாஸ்பண்ணி நியாயவாதிகளாகிற வைக்கில் வேலைகளிலும் ஏரா ளமாகச்சேர்ந்திருக்கிறுர்கள். அப்படிச் சேர்ந்திருப்பதை ஒரு பெரிய புகாராகக்கொண்டுவருவதானது எப்படி நியாயமாகும்.

7. மேலும் தத்காலம் பிராமணர்கள் வைக்கப்பட்டிருக்கும் நிலைமையையோஜிப்போம். பிராமணர்களுக்கு யக்ஞசாலைகளிலும், ராஜகோர்ட்டுகளிலும், சபைகளிலும் சாஸ்திரோக்தமான விர்த்தியினால் காலக்ஷேபம் செய்வதும்போய் அறுப்புக் காலத்தில் நெல் வயல் கண்டுமுதல் களங்களில்போகவும் மதிப்பில்லாமல்போய் உடலில் உயிரிருக்கும்படி வயிறு வளர்க்கும் விஷயத்தில் ராஜாங்கத்தாரால் வேறுஎவ்வித உதவியும் கிடைக்காமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போதுங்கூடப் பிராமணர்கள் ஜனங்களுடைய ஆத்மார்த்த க்ஷேம கைங்கரிப விஷபத்தில் மௌனமாயிருந்து கொண்டே பாடுபட வேண்டியதாயிருக்கிறது.

பிராமணர்களல்லாத சினேகிதர்களே பிராமணர்கள் இதைக் காட்டிலும் ஏராளமான லாபம் வரக்கூடியதாயிருக்கிற வேளாண்மைத் தொழிலிலும் கடல் கடந்து விபாபாரம் செய்யும் தொழிலிலும் எல்லாவிதக் கைத்தொழில் வேலையிலும் பிரவேசிக்காமல் இதுவரையில் கொஞ்சம் விலகி நிற்கிறார்களே அதைக்கண்டு நீங்கள் சந்தோஷப்பட வேண்டுமல்லவா ?

9. உங்களது நன்மைக்கு இக்காலத்தில் யதார்த்தத்தில் விரோதிகள் யாரென்றால் பிராமண தேகத்துடன் ஜனித்து ஸோஷல் ரிபார்மர்கள் என்ற பேர் வைத்துக்கொண்டு பிராமணர்கள் கப்பல் யாத்திரை செய்யலாமென்றும் அவர்கள் கைத்தொழில் வேலைசெய்வது சாஸ்திர விரோதமில்லையென்றும் பலவிதமாய் வாதிக்கிறார்களே அவர்களல்லவா உங்களுக்குப்பெரிய சத்துருக்களாவார்கள்.

10. அப்படி ஸோஷல்ரிபார்மர்கள் செய்யும் முயற்சிகள் ஜயிக்கும் பக்ஷத்தில் பிராமணர்கள், நீங்கள் இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கும் வியாபாரம் முதலிய லாபகரமான விருத்தியில் பிரவேசித்துவிட நேருமல்லவா ? அப்படி அந்தத் தொழில்களிலும் அவர்கள் போட்டிக்கு நுழைந்தார்களானால் உங்களுடைய பாடு இன்னம் விபரீதமான கேட்டையடையுமல்லவா?

11. ஆகையால் நீங்கள் ஸோஷல்ரிபார்மக்காரர்களுடன் சேராமல் வைதிகமதத்தைக் கைப்பிடிக்கும் பிராமணர்கள் விஷயத்தில் பிராமணரல்லாத நீங்கள் உண்மையான உதவிசெய்ய வேண்டும். அவர்கள் வைதிகமார்க்கங்களை நழுவ விடாமலிருக்கும்படியான முயற்சியில் நீங்கள் அவர்களுக்கு உதவி புரிய வேண்டும். அப்படி உதவிபுரிவது எல்லோருக்கும் க்ஷேமம்.

12. நான் சொல்லும் யதார்த்தத்தை ஆயாசப்படாமல் கிரஹித்து உங்கள் மனதில் தப்பெண்ணத்தினாலோ அல்லது பொறாமையினாலோ குடிகொண்டிருக்கும் வீணான கோணல் கொள்கையை நீக்கி ஸோஷல்ரிபார்மக்காரர்கள் தூண்டிவிடும் புத்தியைப் பாசாங்கென்று உணர்ந்து உண்மையானவைதீகமதக் கொள்கையைக்கைக்கொண்டிருக்கும் பிராமணர்களை உங்களுக்கு யதார்த்த சினேகிதர்கள் என்று நம்பி அவர்களாலே தான் உங்களுக்கு இகத்திலும் பரத்திலும் ஜீவன் கடைத்தேறும்வழி கைகூடுமென்று எண்ணிக் கிரமமான மார்க்கத்தில் நடப்பீர்களாக.

13. பிராமண சினேகிதர்களே பிராமணரல்லாதார் விஷயத்தில்நீங்கள் எப்போதும்நேசத்தோடேயே நடக்கவேண்டும். அவர்கள் தப்பபிப்பிராயத்தாலும் அல்லது குரோதத்தாலும் என்ன பிழைகள் செய்திருந்தாலுங்கூட அவைகளை மனதில் வைத்துப் பாராட்டக்கூடாதென்பது உங்களுக்கு ஏற்பட்ட தர்மமல்லவா? அவர்கள் உலகவாழ்க்கையில் க்ஷேமமடையும்படிக்கும் பரலோகத்திலும் க்ஷேமமடையும்படிக்கும் உண்மையான மத தர்மமார்க்கத்தை அவர்களுக்கு எடுத்துக்காட்டுவது உங்களுடைய பொருப்பான கடமையல்லவா? தங்களையறியாமலோ அல்லது வேறு தூண்டுதலாலோ அவர்கள் ஏதாவது பேசிவிட்டாலும்கூட நீங்கள் அதைப் பாராட்டக்கூடாது.

14. வீண் அறியாமையினாலே வைதிக வகுப்பென்றும் லௌகிகவகுப்பென்றும் பிராமணர்களாகிய உங்களுக்குள் இரண்டுவிதமான பேதமுண்டாய் விட்டது. பிராமணர்களிலேயே சிலர் தங்களுடைய புராதன குல ஆசாரத்தையும், பிராமண தர்மத்தையும் உதாசீனம் செய்துவிட்டுத் தாங்கள் இந்த உலகத்

177325

தில் ஏன் ஜனித்தோமென்பதையும் தங்களுடைய ஆத்மா கிருதார்த்தம் அடையும் வழியையும் மறந்து ஹிந்துக்களல்லாதாருடைய கொள்கைகளையெல்லாம் யோஜியாது பின் தொடர்ந்து வைதிக ஹிந்துமதமென்பது எல்லாம் 'ஹம்பக்' என்றும் வைதீகப் பிராமணர்கள் உலகத்தில் ஜீவித்திருப்பது அனாவச்யமென்றும் உங்களைப்பார்த்து முகத்தெதிரே தூஷிப்பார்களேயானால் அவ்வளவு தெரியாத பிராமணரல்லாத மற்றையோர்கள் உங்கள் பேரில் குற்றம்கூறி பகைத்துக்கொள்வது ஓர் ஆச்சர்யமாகுமா.

15. காலமிருக்கப்பட்ட ஸ்திதியைக் கவனித்து நீங்கள் என்ன செயயவேண்டுமோ அதைச் செய்யுங்கள். இந்தக் காலம் கூட்டம்கூடி வாது பேசுவோருக்குத்தான். ஒரு கக்ஷி என்ன சத்தியமாயும் நியாயமாயும் பொதுவாய் எல்லோருக்கும் நன்மை பயக்கும்படியாயும் இருந்தாலும்கூட அதைப்பற்றிப்பலர் ஒன்று கூடிப்பேசினால்தான் காரியம் கைகூடுவதாயிருக்கிறது. உங்களில் பிராமணஸோஷல்ரிபார்மர்கள் உலகத்திற்குச்செய்யும்தீமையையும் அவர்கள் செய்யும் தப்புவழிகளால் உலகத்திற்கும் மதத்திற்கும் எத்தனை கெடுதல்கள் உண்டாகுமென்பதை நன்றாய் ஜனங்களுக்கு எடுத்துக் கூறுவதில் நீங்கள் மிகவும் பாடுபடவேண்டும் அவர்கள் செய்யும் பிழைகளையும் அறியாமையையும் வீண் கக்ஷியையும் வெளியில் இழுத்துவிட்டு நம்முடைய பிராமணரல்லாத ஹிந்துக்களை வித்யாக்ஞானத்தால் போதித்து துன்மார்க்கக் கூட்டத்தினின்று அவர்களை விடுவித்து அவர்கள் மனது கொஞ்சம் கொஞ்சமாய் நல்வழியில் திரும்புமாறு நீங்கள் மிகவும் பாடுபட்டு உழைக்கவேண்டும்

16. மனுஷ்யாளைப்பற்றியும் பதார்த்தங்களைப்பற்றியும்மனதில் தப்பபிப்பிராயம் புகட்டப்பட்டிருக்கும் சிற்சில பிராமணரல்லாதாராகிய சினேகிதர்கள்விஷயத்தில் யதார்த்தம்இன்னதென்று பகுத்துணர்ந்திருக்கும் பிராமணர்களும் பிராமணரல்லாதவர்களில் மீதிப்பேர்களாகிய நீங்களும் என்ன செய்யவேண்டியதென்றால் அவர்கள் அநாரியர் என்ற மஹா இகழ்ச்சிக்குக்காரணமாகும் படுகுழியில் விழுந்து வீணாய்க்கெட்டுப்போகாமல் அவர்களைக் காப்பாற்றிவைப்பதில் நீங்கள் நிமிஷமேனும் தாமதிக்கக்கூடாது.

17. அவர்களுக்கு நீங்கள் போதிக்கவேண்டியதென்னவென்றால் பிராமணர்கள் இந்த துஷ்காலத்தில் பிராமணகிருத்தியத்திலிருந்து நழுவியிருந்தாலும் உண்மையான வேதக்ஞானத்தையும் ஸம்ஸ்கிருதவித்பத்தியையும்கூடச் சிலர் தெரிந்து கொள்ளாதிருந்தாலும் மதம் விஷயத்தைப்பற்றினமட்டில் வேதமானது பிதாஸ்தானத்திலும் அஃது எழுதப்பட்டிருக்கும் ஸம்ஸ்கிருதபாஷையானதுமாதாஸ்தானத்திலும் உண்மையான வைதிகபிராமணன் மோக்ஷஇச்சையுள்ளவர்களுக்கெல்லாம் குருஸ்தானத்திலும் இருப்பதாயும் அவர்களுக்குப் போதிக்கவேண்டும்.

18. அப்படி மூன்று அம்சமாய் இருப்பதென்பதற்குத் தமிழில் எழுதப்பட்டிருக்கும் அனேக உத்தமமானகிரந்தங்களே ஆதாரமாகும். அதையும் இப்போதைய ஸோஷல்ரிபார்மர்கள்பிராமணரல்லாதபக்தர்களால் போர்ஜரியாய்ச்சேர்க்கப்பட்ட நூதன ஆதாரங்கள் என்று அவநம்பிக்கைப்படுகிறார்களோ தெரியவில்லை. கண் கட்டப்பட்டிருக்கும் திராவிட சகோதரர்கள் மோக்ஷவிஷயமாய்ப் பாடுபடும் பெரிய ஆரியக் கும்பலில் தாங்களும் சேர்ந்தவர்கள்தானென்று ஒரு தரம் எப்படியாவது தெரிந்து கொள்வார்களேயானால் தெய்வத்தன்மை வாய்ந்த வேத புருஷனை பிதாவினிடத்திலும் ஸம்ஸ்கிருத வித்வத்தாகிய தெய்வமாதாவினிடத்திலும் பிராமண ஆசாரியனாகிய பரிசுத்தமான குருவினிடத்திலும் வீணனவிரோதம் பாராட்டும் தோஷத்தினால் கேடு வரவழைத்துக்கொள்ளமாட்டார்களென்பது நிச்சயம்.

19. ஆகையினால் அவர்களுக்கு அடிக்கடி எச்சரிக்கை செய்யுங்கள். அப்படிச்செய்யாவிடில் சத்கதியடையும் மார்க்கத்தில் உங்களுடன் கூடவே இதுவரையில் பாடுபட்டு வந்திருக்கும் தோழர்களுக்கு அபகாரம் செய்தவர்களாய் நீங்கள் ஆய்விடுவதுமல்லாமல் சத்கதிநாடுவதையே குறியாய்க் கைக்கொண்ட உங்களுடைய மதத்திற்கும் தேசத்திற்கும் கேடு சம்பவிக்கும்.

20. மேல் நாட்டார் ஐக்கிய சங்கத்திற்கும் ஹிந்துக்களின் ஐக்கியசங்கத்திற்கும் ஆதிமார்க்கங்களிலும் குறிப்பான கொள்கைகளிலும் சம்பந்தா சம்பந்தமே கிடையாது. இரண்டும் முற்றிலும் வேறேயாம். மேல் நாட்டார் ஆசரணையைப் பார்த்து

அந்தப்படி நாமும் நடக்க ஆரம்பித்தால் அனர்த்தமே சம்பவிக்கும். ஒருகுலமானது அன்ய நாகரீகத்தோடு ஒன்றிப்போக இயலாவிட்டாலும் அல்லது மனது இல்லாவிட்டாலும் அத்துடன் சந்தித்துக்கொண்டிருப்பதுகூட அக்குலத்திற்கு க்ஷயத்தை உண்டாக்குமென்பது உண்மையே என்று (Myers) என்பவர் எழுதியிருக்கிறார். ஏனென்றால் அன்ய நாகரீகத்துடன் சேர்க்கையால் ஆத்மசம்பந்தமான பந்தங்கள் குறைந்து போகின்றன. ஆகையால் ஹிந்துக்களாகிய நாம் இழிவையும் கோழைத்தனத்தையும் உதறி எறிந்துவிட்டு தீரத்தையும் சௌரியத்தையும் கைக்கொண்டு ஸநாதன தர்மஆசார அனுஷ்டான முறையைக் கைப்பிடித்துநடந்து வந்தால் தான் நம்முடையஜன்மம்கடைத்தேறும்

21. பெரிய ஆரிய ஹிந்துக்களாகிய உங்களுக்கே இந்த சம்ஸாரபந்தத்திலிருந்து நிவர்த்தி செய்துகொள்ளும் தர்மாசரணையின் லாபத்தைப் பெறும்பாக்கியம் கிடைத்திருக்கின்றது. தர்ம சாஸ்திரத்தின் விதாணைகளை நீங்கள் அனுஷ்டிக்கவேண்டுமென்பது உங்களுடைய நன்மைக்காகவே. அதை அனுஷ்டிப்பதானது முதலில் கொஞ்சம் சிரமம் கொடுப்பதுபோல் இருந்தாலும் பிறகு பெரிய நன்மையையளிக்கும். படித்து முன்னுக்கு வரவேண்டுமென்ற ஆசையால் பள்ளிக்கூடத்துப்பிள்ளைகள் படிப்பதில் எத்தனையோ கஷ்டப்படவில்லையா? சாச்வதமான நன்மையை விடுத்துத் தத்காலத்திய சுகத்திற்கு விரும்பும் உள்ளில் விஷம் கலந்து மாதுரியமான பேச்சுப் பேசுகிறவர்களுடைய வார்த்தையை நம்பாதீர்கள்.

(1) பிராமணரல்லாத சிநேகிதர்களே! மோக்ஷசாம்பிராஜ்ய உன்னத பதவியையடைய சமமாகவே பாத்தியதையையுடைய நீங்கள் உங்களை அனாரியர்களென்று இளப்பம்சொல்லி ஆர்யதர்ம பலன் உங்களுக்குப் பாத்தியமில்லை யென்று சொல்லி மோசம் செய்பவர்களுடைய பேச்சுக்குச் செவிகொடாதீர்கள்.

(2) ஜாதி வர்ணாச்ரமத்தை அழிப்பதால் பிராமணரல்லாதவர்களும் பிராமணர்களும் தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிடுவார்கள். இகபர வாழ்க்கைகளை இகழ்ந்துவிட்டால் ஹிந்துக்களாகிய எல்

லோருக்கும் அனர்த்தந்தான் சம்பவிக்கும். இக்காலத்தில் பிராமணர்களைப் பிராமணரல்லாதார் தோஷம் சொன்னாலும் முன் காலத்திலிருந்த மஹரிஷிகளைத் தாழ்த்திப் பேசுவதும் அவர்கள் பக்ஷபாதத்துடன் கிரந்தங்களைச் செய்தார்களென்று சொல்வதும் மிகவும் அநியாயமே. ஸ்மிருதிகளில் எங்கும் பிராமணர்களையே ஸ்தோத்திரம் செய்யவில்லை. பிராமணர்களைத் தாக்ஷண்யப்பட்டு விட்டுக்கொடுக்கவுமில்லை. சாஸ்திரோக்த கிரந்தங்களைக் கொஞ்சம்கூட அலக்ஷியம் செய்யும் பிராமணர்களை ஸ்மிருதிகள் படுத்தும்பாடு கொஞ்சநஞ்சமில்லை. அதுபோலவே சூத்திரர்களையும் ஸ்மிருதிகள் எங்கும் வேண்டுமென்று நிந்திக்கவும் இல்லை. அவர்களை அவைகள் அவ்வளவு ஹிம்ஸிக்கவுமில்லை. ஒவ்வொரு ஜாதியார்களுக்கும் தர்மம் இன்னதென்று விதித்து அதை மீறி நடந்தவர்கள் பதிதராவார்களென்று சொன்னால், அஃது ஒரு பக்ஷபாதமாகுமா? அப்படி தர்மத்தை விதித்திருப்பது ஒருவருக்கொருவர் கலகமில்லாமல் வாழ்வதற்கு எவ்வளவு சௌகரியம் என்பதை அனுபவசாலிகளே அறிவார்கள். பிராமணர்கள் ஒவ்வொரு ஜாதியாரும் நல்லகதியடையும்பொருட்டே பற்பல சாஸ்திரங்களையும் எழுதிவைத்தார்களேயல்லாது தனது ஜாதியின் க்ஷேமத்திற்கு மாத்திரம் அவைகளை எழுதிவைத்துக்கொண்டாரில்லை. நீங்கள் சூத்திரர்கள் சுச்ருஷைசெய்வதென்றால் ஏதோ ஈனமான அடிமைத்தொழில் செய்வதென்று எண்ணியிருக்கிறீர்கள். அப்படி எண்ணுவது பிசகு. சுச்ருஷை என்பதின் உண்மையான அர்த்தத்தை நீங்கள் தெரிந்துகொள்ளவில்லை. ஏதோ முன்னோராகிய ரிஷிகள் தங்கள் வம்சத்தினரின் நலத்திற்காகமட்டும் அநேக காரியங்களைச் செய்துவைத்துவிட்டார்கள் என்று நினைக்கிறீர்கள். அதுவும் சரியல்ல. அவர்கள் எப்படித் தனது ஜாதி நற்கதி அடையும்பொருட்டும் அவர்களுடைய விருத்தியை உத்தேசித்தும் பிர்மவித்யா விஷயமான கிரந்தங்களை எழுதிவைத்தார்களோ, அப்படியே க்ஷத்திரியர்களின் நிமித்தம் அநேக நீதி கிரந்தங்களையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். க்ஷத்திரியர்களின் நிமித்தம் தண்டநீதி கிரந்தங்களை எழுதிவைத்திருப்பவர்கள் வியாஸர், நாரதர், காமந்தகர், சுக்கிரர், கடகர்ப்பரன், சாணக்யன் முத

ஸானவர்களாகிய பிராமணர்களே. யுத்தவித்தையை உபதேசித்த வர்கள் சுக்கிரன் முதலான பிராமணர்கள்தான். வைச்யர்களின் நிமித்தம் பசுபாலனமார்க்கம், வியாபாரமுறை இவைகளையியற்றி பிருகத்ரதனென்பவனுக்கு உபதேசித்த பகவான் பராசரராகிய பிராமணோத்தமரே. அப்படியே சூத்திரர்களுக்காக விவசாயசாஸ்திரம், அச்வலக்ஷண சாஸ்திரம் முதலியவைகளை எழுதிவைத்த மஹான் சாலிஹோத்ரரென்னும் வேதியரேயாவர். யானைக்காக ஆயுள்வேத சாஸ்திரமெழுதிவைத்த மஹான் பாலகாப்யரென்ற பிராமணோத்தமரே. இந்த அச்வகஜ வைத்தியத்தை பிராமணர் கைக்கொண்டாரா? அல்லது பிராமணனுக்கே இவை யென்று சொன்னாரா? இரண்டுமில்லை. கிருஷிக்கு உபயுக்தமாய் பூபரீக்ஷை வழி காண்பித்தவர்கள் சாமஹதிகர்களென்னும் பிராமணர்களே.

ஹஸ்த ஆயுர்வேதம், விருக்ஷாயுர்வேதம் முதலிய பல ஆயுர்வேத சாஸ்திரங்களையும், நாட்டிய சாஸ்திரம் கிருஹ நிர்மாண சாஸ்திரம், சித்திரமெழுதும் சாஸ்திரம், பல அற்புத சிற்பசாஸ்திரம் முதலிய 64 கலைஞான சாஸ்திரங்களையும் எழுதிவைத்தவர்கள் பிராமண குலத்திலுதித்தவர்களே. ஓரிடத்தில் முளைத்திருக்கும் கன்றுகளை மற்றோரிடத்திற்குக் கொண்டுபோகும் கிரமமும், பூமியின் ரோகலக்ஷணங்கள் அதற்குச் செய்யவேண்டிய சிகித்ஸை விருக்ஷங்களின் விசேஷங்கள், அதற்கு மாற்றல் விருக்ஷத்தில் புஷ்பம் அதிகமாய் உண்டாகச் செய்தல், கன்றுகளை நடுவதற்கு வேண்டிய இடைவெளி, பதிகம் போடவேண்டிய கிரமம், விதைகளை முதலில் சம்ஸ்காரம் செய்யவேண்டிய முறை ஆகிய இன்னும் அநேக விதங்கள் வெகு விஸ்தாரமாய் அந்த விருக்ஷாயுர்வேத சாஸ்திரத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

ஆயுர்வேத கிரந்தங்களை எழுதிவைத்த चरकसुश्रुतादि (சரக சுச்ருதர்) பிராமணர்கள் தமது ஜாதியாரின் நன்மைக்காக அவைகளை எழுதிவைத்தார்களா? இல்லையே.

"तस्माद्ब्राह्मणेन भेषजं न कार्यम्"

என்று சொல்லிப் பிராமணர்கள் ஆயுர்வேதத்தொழிலை ஒருகாலத்திலும் செய்யக்கூடாதென்று தடுத்துவிட்டார்களே.

இதுபோலவே கிருஷி செய்யும் வித்யை, வஸ்திரம் நெய்யும் தொழில், வீடுகட்டும் தொழில், சித்ரம் எழுதும் தொழில் இவைகளில் ஒன்றையாவது பிராமணர்களின் நன்மைக்காகப் பிராமணர்கள் செய்தனரென்று சொல்லமுடியுமா ?

இவ்வளவு சாஸ்திரங்களை எழுதிவைத்தும் பிராமணர்கள் தாங்கள் எந்த சாஸ்திரங்களை எடுத்துக்கொண்டனரென்பதைச் சற்று ஆலோசித்துப் பார்க்கவேண்டும். கேவலம் பரலோகத்திற்கு மட்டும் சாதகமான கர்மாநுஷ்டானங்களையும் மிகுந்த சரீர கிலேசங்களைக் கொடுக்கக்கூடியதும் க்ருச்சர உபவாஸாதி நியமங்களைப் போதிக்கக்கூடியதுமான வேதங்களையும் சாஸ்திரங்களையும் தங்களுக்கு வைத்துக்கொண்டார்களேயல்லாது இகலோக சௌக்கியங்களுக்கு மிக்க ஆவச்யமானவைகளும் ஏராளமான திரவியங்களைச் சேர்க்கச் சாதகங்களுமான, மேற்சொல்லிய வியாபாரம், கைத்தொழில் முதலியவைகளைச் செய்யத் தங்களதுமனத்தாலுங்கூடப் பிராமணர்கள் இஷ்டப்பட்டார்களில்லையே ?

பிராமணர் சூத்திர விருத்தியை மட்டிலும் தொடவே கூடாதென்று "सर्वथा तु वृत्तिरशौद्रेण" என்று கௌதமர் தடுத்திருக்கிறார்.

சூத்திரர்களுக்காகச் செய்திருக்கும் விஷயங்களைப் பாருங்கள். ஈனத்தொழிலேற்படுத்தியிருக்கிறார்களா ? என்று கவனியுங்கள். நாட்டியத்தில் ஜீவிக்கவேண்டியவர்கள் சில சூத்திரர்களுக்கேயென்று பரதநாட்டிய சாஸ்திரம் எழுதிவைத்த பரதாசாரியர் பிராமணரேயாம். இவர் தமது பெண் நாட்டியமாடிப் பிழைக்கட்டுமென்று சிரமப்பட்டு அந்த சாஸ்திரத்தை யெழுதி வைத்தாரா ? வாசனைத்திரவியம் சேர்ப்பதினால் சிலர் ஜீவிக்கட்டுமென்று கந்தசாஸ்திரம் எழுதிவைத்தவர் அத்திரி என்ற பிராமணோத்தம மஹாருஷி. இவர் ஆச்ரமத்திற்கு ஸ்ரீராமர் செல்ல ஸீதாதேவிக்கு அனசூயை விசேஷமாய் வாசனைத் திரவியங்களால் உபசரித்தாளென்று ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது. வஸ்திரம் நெய்யும் சூக்ஷ்மவிதியைக் கண்டவர்கள் பிராமணர்களே. ரதம் முதலானவைகளைச் செய்யவும், வாஸ்து நிர்மாணம்

செய்யவும் சாஸ்திரம் எழுதிவைத்தவரும், சித்திரசாஸ்திர வழிகளைக் கண்டவரும் பிராமணரே. அவர்களுடைய கருணையையும் பக்ஷபாதமின்மையையும் பார்த்தீர்களா? எந்த மஹான் தண்டநீதியை க்ஷத்திரியர்களுக்காக எழுதிவைத்தாரோ, அவர் ராஜ்யபாரம்பண்ண ஆசைப்பட்டது கிடையாதே. சந்திரகுப்தனுக்கு ராஜ்யம் சம்பாதித்துவைத்த சாணக்யனென்னும் பிராமணன் தனது வீட்டில் கோமயமும் அம்மியும் முட்டையும் பாழும் சுவரும் நிற்கக்கிடைத்தவனாய் மரணமடைந்தானே. அதுபோல ஆபரண நிர்மாணவழி சொன்னவருடைய ஆபரணம் ருத்ராக்ஷமே. வாஸ்துசாஸ்திரம் எழுதிவைத்தவருக்கு ஜீர்ணமான பர்ணசாலைக் குடிசைதான் வாசஸ்தானமாகிய அரண்மனை. வஸ்திரம் நெய்யும் தொழிலைச் சொன்னவருக்கு மரவுரிதான் ஆடை. கிருஷி சாஸ்திரம் சொன்னவருடைய ஆஹாரம் சருகும்கிழங்குமேயாம். வாசனைத்திரவிய வழிசொன்னவர் பூசிக்கொண்டது பஸ்பமேயாம்.

இவ்விதமாய் எழுதப்பட்ட எல்லா சாஸ்திரங்களையும் பிராமணர்கள் பிராமணரல்லாதாருக்காகவே கொடுத்துவிட்டார்கள். இதெல்லாம் பக்ஷபாதச் செய்கையாகுமா? பக்ஷபாதமென்பது முன்னுமில்லை, பின்னுமில்லை. சூத்திரர்களின் தொழிலில் பிராமணர்கள் பிரவேசிக்கக்கூடாதென்று செய்ததுபோலவே வேதம் ஓதும் தொழிலைச் சூத்திரர்களுக்குதவாதென்று தடுத்திருந்தால் அது ஒரு பக்ஷபாதமாகுமா? சூத்திரர்களுக்குப் பரலோகமோக்ஷமுண்டே. நந்தன், கபீர்தாஸ் முதலியவர்கள் நேரே பரலோகம் அடையவில்லையா? இப்படியெல்லாம் பிராமணர்கள் பாடுபட்டு ஜனங்கள் எல்லாருக்கும் க்ஷேமமுண்டாகவேண்டுமென்று எவ்வளவோ உழைத்திருக்க, பிராமணர்களை உங்களில் சிலர் தூஷிப்பது நியாயமாகுமா?

ஒருவன் உலகத்திலுள்ள யாதாவதொருவகைப் பதார்த்தத்தை அடியோடு வெறுத்தால் அவனுக்கு அதன் குணம்சத்தை அனுபவிக்கவழியிராது. அதாவது மாம்பழமென்ற தினுசையே ஒருவன் வெறுத்தால் நல்ல மாம்பழத்திலிருக்கக்கூடிய மதுரமான ரஸத்தின் ருசியை அந்த வெறுப்பவன் அனுபவிக்கமுடியாமல் போய்விடும் அப்படிப்போலவே பிராமணனில் இவன்

கெட்டவன் அவன் கெட்டவன்என்று பார்த்துத்தள்ளிக் கெட்டவனைத் திருத்துவதற்குப் பதிலாய் பிராமணஜாதியானையே மொத்தமாய் ஒருவன் வெறுத்தானானால் பிராமணனுடைய குணங்களையும் உத்தமமான கொள்கைகளையும் ஒருங்கே வெறுத்துத் தள்ளும்படியிருக்குமல்லவா? அப்படிப்பட்ட உத்தமமானகொள்கைகளை ஒருவன் முன் வைத்துக்கொண்டு உயிர் வாழ்ந்தால் மட்டுமே அவன் முன்னுக்குவரலாம். எவ்வளவுக் கெவ்வளவு ஒருவன் ஜாஸ்தி எண்ணிக்கையுள்ள நற்கொள்கைகளைத் தனக்குக் குறியாய் முன் வைத்துக்கொண்டு தனது நடத்தையை ஒழுங்குபடுத்திக் கொள்ளுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் ஜனசமுகத்திற்குச் சாச்வதமான உபகாரியாகிறான். அப்படிப்பட்டவர்களுக்கு எக்காலத்திலும் எத்தேசத்திலும் ஜனசமூகத்தாரால் உண்மையான மரியாதையுண்டு. நெபோலியனைக்காட்டிலும் ஸாக்ரடீஸ்க்கு ஜனசமூகச்சேவை புரிவதில் அதிகம்பேர் வந்திருப்பதற்குக்காரணம் அந்த ஸாக்ரடீஸ் என்பவர் பெரிய பிராமணக் கொள்கைகளின் செல்வாக்குக் குள்ளாயிருந்தபடியால்தான்.

எவனொருவன் பிராமணரை மொத்தமாய் வெறுக்கிறானோ அவன் பிராமணனுக்குரித்தான குணங்களையும்வெறுக்காமலிரான் அக்குணங்களைத் தனது உயிர்வாழும் நடத்தைக்குறியாக அங்கீகரிக்கவும் மாட்டான். பிர்ம்மத்வேஷம் கொள்வதினால் ஒருவன் எப்போது பிர்ம்மகுணங்களையும் வெறுக்கிறானோ அப்போதே அவனுடைய நாசம் முன்னேயோ பின்னேயோ சம்பவிக்கவே செய்யும். பிர்ம்மத்வேஷம் கொள்ளக்கூடாதென்ற நடவடிக்கையானது முகம்மதியராளுகைக் காலத்திலும் இருந்து வந்தது. பேர்போன அக்பர் சக்ரவர்த்தியின் ஆளுகையில் உண்டாயிருந்த உன்னதவாழ்விற்கு அவர் அனுசரித்துவந்த பிராமணக்கொள்கைகளே ஒருவாறு காரணமாகும். அவுரங்கஜீப் சக்ரவர்த்தியின் ஆளுகையில் தேசத்திற்குண்டான நாசத்திற்குப்பிராமணக்கொள்கைகளின்மீது அவர் கொண்ட த்வேஷமே காரணமென்னலாம். பிராமணர்கள் உலகவியாபாரத்தைச் சுருக்கித்தத்வஞானப் பயிற்சியில் முனைந்து தேசநன்மைக்காகத் தன் புத்திப் பிரயத்தனங்கள் முழுவதும் பயன்படும்படி செய்துவந்ததால் தான் இந்தியா

வில் அவர்கள் கீர்த்தி முற்காலம் முதல் நிலைநின்று வந்திருக்கின்றது. பிராமணர்களின் தற்கால நிலைமை அந்நியநாட்டு நாகரீகக் குழப்பத்தாலும் குழந்தைப்பருவமுதற்கொண்டே அந்யபாஷைப் பயிற்சியாலும் எவ்வளவு தாழ்ந்துபோயிருந்தாலும்கூட அவர்களுடைய பூர்வ சம்பிரதாயங்களும் தர்மானுஷ்டானமும் அவர்களுடைய சரீரஸம்ஸ்காரத்தினால் அவர்களை விட்டு நீங்கிப்போகவில்லை. பிராம்மண்யமும் ஹிந்துமதமும் வேறு வேறில்லை.

ஹிந்து என்ற பதத்திற்கு டிக்ஷனரிப்படி அர்த்தம்என்னவெனில் ஹிந்துஸ்தானில் பிறந்து பிராமண்யத்தில் நம்பிக்கை வைத்துவரும் இந்திய சுதேசி என்பது, ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் மற்ற பாஷைகளிலும் புகட்டியிருக்கும் சாஸ்திரங்கள் புராணங்கள் எதைப் பார்த்தாலும் அவைகளில் பிராமண்யத்தின் உத்கிருஷ்டம் வலைபோல் பின்னிக்கொண்டு நிற்கிறது. ஹிந்துமதமும் பிராம்மண்யமும் நத்தாங்கூடும் அதிலுறையும் பூச்சியின் வளர்ச்சியும்போல ஒன்றுக்கொன்று ஜீவநிலையாய் இருந்துவருகிறது. பூச்சியைக் கிண்டியெடுத்தால் கூடுமுநிராது, கூட்டைக் கிழித்தெடுத்தால் பூச்சி உயிரோடிராது. அதுபோல பிராமண்யம் விலகின ஹிந்துமதம் உயிரோடிருக்குமென்று எண்ணுதல் மனதிற்கும் புத்திக்கும் எட்டாத அசம்பாவிதமென்று மேல்நாட்டுச் சரித்திரக்காரர்களும் எழுதிவைத்திருக்கிறார்கள். பிராமண்யத்தைத் துவேஷிப்பவனெவனோ அவன் ஹிந்துமதஸ்தனென்று சொல்லிக்கொள்ள முடியாது. ஹிந்துமதத்தைக் கைவிட்டவனாவான். பூர்வ ஸம்ஸ்காரம் தன்னுள் அழுந்தியிருக்கும் சொந்த மதத்தைக் கைவிட்டவன் எவனோ, அவன் இந்த ஜன்மத்தில் வேறொரு மதத்தில் புதிதாய்ப் புகவும் யோக்கியதையை இழந்தவனாகிறான். திருப்பித்திருப்பி இவ்வளவுதூரம் எடுத்துரைத்ததெல்லாங்கூடி இந்தியாவிலுள்ள பிராமணர்களும், பிராமணரல்லாத இதர ஹிந்துக்களும் இப்போதாவது கண் விழித்துக்கொண்டு அந்நிய நாகரிக வித்தைப்பயிற்சியால் தங்களுக்குள் உண்டாயிருக்கும் சச்சரவுகளை நீக்கி மதத்திற்கே வந்திருக்கும் இந்த ஆபத்தான காலத்தில் அவரவர்கள் செய்யவேண்டிய உசிதமான முயற்சி எதுவோ, அந்தக் கடமையைக் கைக்கொள்ளவேண்டும்

17732
60

என்பதுவேயாம். ஆகையால் ஹிந்துமதத்தின் எல்லா வகுப்பினரும் அன்னியோன்யமாய் ஒருமித்துத் தத்தம் ஸ்வதர்மானுஷ்டான தர்மத்தைக் கைக்கொண்டு கலிபுருஷனை லக்ஷியம் செய்யாமல்

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥
परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय सम्भवामि युगे युगे ॥

என்று அபயவாக்குக் கொடுத்திருக்கும் ஸ்ரீ பகவானையே நம்பிச் சரணமடைந்து பக்திசெய்து ஸ்வதர்மத்தை நடத்திவந்தால் எப்போதாவது அந்த தர்மத்திற்கு க்லானி வரும்போலிருந்து அதர்மம் மேலெழுந்தால் அச்சமயம்பார்த்து தக்ஷணமே பகவான் இப்புண்ணிய பூமியில் அவதாரம்செய்து தர்ம ஸ்தாபனத்தை நிலைநிறுத்தி நம்மையும் மற்ற உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளையும் ரக்ஷித்துக் காப்பாற்றுவார் என்பதில் சந்தேகமேயில்லை.

ஓம் தத்ஸது.